# சிரித்திரன்




CHIRITHIRAN

A CARTOON MAGAZINE

1971

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிந்தெட்டிக் ஆடை வகைகளில்

நாங்கள் பெருமையுடன் அளிக்கும் புதிய படைப்புகள்

சீமா சாரிகள் மற்றும்

நங்கையர் அணியும்

நாகரீக ஆடைகள்

# சீமாசில்க் இண்டஸ்ட்ரீஸ் லிமிட்.,

திருநெல்வேலி யாழ்ப்பாணம்


தந்தி: சீமாசில்க் தொலைபேசி: 7170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூலை 1971
நகை: 7
சுவை: 9



# முன்முறுவல்



ஆசிரியர்: ஏன் நீ ஐந்து நாள்த் தான் பாடசாலைக்கு வருகிறாய்... இப்போ ஆறு நாள் பாடசாலை யென்று தெரியாதா?


மாணவன்: எனக்கு ஆறு கூடாத அதிஸ்ட எண் சார்.



ஒருவர்: இப்போ வீட்டு நெருக்கடி ஒரு அளவிற்குத் தீர்ந்தது,

மற்றவர்: ஏன் வீட்டில் இருந்தவங்க எங்கோ போயிட்டாங்களா?

ஒருவர்; இப்போ பிள்ளைகள் எல்லாம் கூடிய நேரம் பாடசாலையில் இருக்கிறார்கள்.



சிவம்: ஏன்டா இப்போ ஆறு நாள் பாடசாலை வைத்தாங்க.

குமார்: ஆறு இல்லா ஊருக்கு அழகுபாழ் என்றதை பிழையாப் புரிந்து கொண்டாங்க போல.





சிரித்திரனில் வெளியாகும் கதை, கட்டுரை, நாடகங்களில், வரும் பாத்திரங்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே.

தனிப்பிரதி—45

ஆறுமாதச் சந்தா—3-25

வருடச்சந்தா—6-50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கருடன் நன்றாக அவதானித்துக் கொண்டுதானிருந்தது.

அந்த அம்மையார் இடுப்பைப் பிடித்தார், காலைப்பிடித்தார், அம்மாடி உடம்பெல்லாம் பச்சை இறைச்சியாய் நோகுது' என்று முணகிக்கொண்டு வராந்தாவில் இருந்த கதிரையில் 'தொப்' பென்று விழுந்தார்.

வாசலில் நின்ற கீரைவிற்கும்பெண் 'ஏன்னம்மா உடம்புக்கு சுகமில்லையா?' என்று இரண்டு கட்டுக் கீரையை எடுத்து நீட்டியவாறு கேட்டாள்.

'அதையேன் கேட்கிறாய் போ!' என்று அலுத்துக்கொண்டார் அம்மையார். அதன்பின் அவர் தன் உடம்பு நோவுக்கு சொன்ன காரணம் 'கருடனை' அதிர்ச்சி அடைய வைத்தது.

'அறுபத்தினாலு நாள் லீவில் என்ர பெடியள் பெட்டையள் வீட்டிலை நிண்டதாலை ஒரு கஷ்டமுந் தெரியல்லை. பெட்டையள் சமைக்குங்கள், பெடியள் 'மார்க்கெற்றிங்' செய்யுங்கள். நான் சும்மா இருந்து பேப்பர் வாசிக்கவேண்டியதுதான். இப்ப பள்ளிக்கூடம் துவங்கின பிறகு தான் நான் எல்லாஞ் செய்ய வேணும். முதுகு முறிஞ்சு போச்சு' என்ற வார்த்தையில் அப்படி அதிர்ச்சி அடைய என்ன இருக்கிறது என்று உங்களுக்குக் கேட்கத் தோன்றும்.

நிறைய இருக்கிறது.

இதே அம்மையார் பள்ளிக்கூடம் தொடங்குவதற்கு சில நாட்களுக்கு முன்தான் 'பிசாசுகள்! எப்பதான் பள்ளிக்கூடம் துவங்கப்போகுதோ தெரியவில்லை. இதுகள் போய்த் துலைஞ்சால்தான் இந்த வீட்டில் நிம்மதி' என்று நிமிஷத்துக்கு ஒரு தடவை கத்திச் சத்தம் போட்டதை 'கருடன்' அருகில் உள்ள கட்டைப் பாலையில் இருந்து கேட்டுக்கொண்டிருந்தது.

அம்மையாருடைய பிள்ளைகளும் இலேசுப்பட்டவர்கள் இல்லைத்தான்.

தம்பி, தமக்கையின் கூந்தலைப் பிடித்து இழுக்க, தமக்கை 'அம்மாவ்' என்று அலற சின்னண்ணா தனது மர்மநாவல் வாசினை குழப்பிவிட்டதே என்று குதித்து வந்து தங்கையின் முதுகில் 'படார்' என்று ஒன்று வைக்க, பெரியண்ணா எல்லாவற்றுக்கும்கால் குட்டித்தம்பி தான் என்று எழுந்து ஓடிவர அவனுக்கு நாலு சாத்த, அவன் ஊரைக்கூட்டிஅழ, அம்மா 'என்னடா அது' என்று கத்திக் கொண்டு சமையல் அறைக்குள் இருந்து வெளியேவர, சமையல் அறைக்குள் மெதுவாக ஒருமனித எலி சமயம் பார்த்து புகுந்து சீனியைத் திருட, வீடு தினமும் அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது உண்மைதான்!

இருந்தாலும் பிள்ளைகள் அவரவருக்குஒதுக்கப்பட்ட வேலையைச் செய்து முடிக்கத்தவறியது கிடையாது. அதைத்தான் அம்மையார் ஒத்துக் கொண்டு விட்டாரே!

## 'கெராட்டோ கொன்ஜங்டிவிடிஸ்'

'இந்த 'கெராட்டோகொன் ஜங்டிவிட்'ஸால் கொஞ்ச நாட்கள் ஒரே தொல்லையாகப் போய் விட்டது' என்று ஒருவர் தனது சினேகிதருக்கு சொல்லிக்கொண்டிருந்தார்.

ஆனால் எல்லாந் தெரிந்த அவரது 8 வயது மகன் இடையே குறுக்கிட்டான்.

'அதுதான் 'கொரில்லா அக்டிவிட்டீஸை' கவர்ண்மென்ட் அடக்கிவிட்டதே அப்பா' என்றான் மகன்.

'நீ உன் அம்மா மாதிரித்தான் ஒன்றும் விளங்காது என்று அப்பா சிரித்துவிட்டு 'கெராட்டோ கொன்ஜங்டிவிடிஸ்' பற்றி நண்பருக்கு தொடர்ந்து கூறலானார்.

இந்த 'கெராட்டோ கொன்ஜங்டிவிடிஸ்' கண்ணோய் முதலில் எகிப்தில் இருந்து பம்பாய்க்கு வந்ததாம். பின்னர் அங்கிருந்து சென்னைக்கும், சென்னையிலிருந்து கொழும்புக்கும் வந்ததாம்.

கொழும்பில் இப்போது சிவப்புக்கண் பேர்வழிகளின் தொகை அமர்ந்து விட்டது' மாகாணங்களில் இன்னும் அவர்கள் காணப்படுகிறார்கள்' இப்படி அவர் சொல்லிக்கொண்டு போனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு லட்சம் பேரைக்கொன்ற ஒரேயொரு சொல்

# மொழிபெயர்ப்பால் ஏற்பட்ட அ(ன)ர்த்தம்

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் முடிவு கட்டம் நெருங்கிக் கொண்டிருந்த காலம். ஜப்பான் நாட்டை சரணுகதி அடையுமாறு, ஜப்பான் நாட்டுக்கென ஒலிபரப்பப்பட்ட தனி அலை வரிசையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது; வற்புறுத்தப்பட்டது.

யுத்தம் போகிற போக்கில் தமக்கு படுதோல்விதான் ஏற்படும் என்பதை பல மாதங்களுக்கு முன்னதாகவே, சந்தேகமறத் தெரிந்துகொண்டனர். ஜப்பானிய தலைவர்கள். சமாதானக் கொடியை உயர்த்தி சரணுகதி அடைவதைத் தவிர வேறு மார்க்கமே இல்லை யென்ற ஒரேவழி ஏற்பட்டுவிட்டது. ஜப்பானிய மந்திரிசபை இந்த எச்சரிக்கையைத் தட்டிக் கழிக்க மறந்தும் நினைக்கவில்லை. ஆனுல் ஜப்பானிய மக்களின் வெறுப்புக்கு ஆளாகாமல் அறிக்கை தயாரித்து வெளியிடவேண்டுமே. அதற்கான அவகாசம் அவர்களுக்குத் தேவையாக இருந்தது. எனவே உடனடியாக இச்சபை தனது முடிவைத் தெரிவிக்கவில்லை. அவசரக் குடுக்கைகளான பத்திரிகைக்காரர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை போலும் காலதாமதமின்றி கருத்துரை வழங்க வேண்டுமென கட்டாயப்படுத்தினர். நச்சரிப்பை தாங்க முடியாத பிரதமர் சுசூக்கி பத்திரிகையாளர் மகாநாட்டைக் கூட்டிஞர்.

'தன்னுடைய மந்திரிசபை சரணுகதி வற்புறுத்தலையிட்டு இன்னும் சில நாட்களில் கருத்துரை வழங்கும்' என்று ஜப்பானிய மொழியில் பேசிய பிரதமர் சுசூக்கி சொன்னுர். 'கருத்துரை' என்பதற்கு அவர் பிரயோகித்த வார்த்தை 'மொகுசாட்சு' என்ற சொல்லுக்கு அட்சர சுத்தமான ஆங்கில வார்த்தை இல்லவே இல்லை. ஜப்பான் மொழியில் கூட பளிச்செனக் கருத்தைத் தரக் கூடிய சொல்லல்ல இது. மயக்கமான வார்த்தைதான். வந்திருந்த பத்திரிகையாளருக்கோ 'மொகுசாட்சு' என்ற பதப் பிரயோகம் புரியவே இல்லை. இவர்கள் 'டொமீ ஏகன்ஸி' என்ற ஸ்தாபனத்திடம் மொழி பெயர்க்கும் விவகாரத்தை விட்டுவிட்டனர். இந்த ஸ்தாபனம் 'கருத்துரை' என்பதை மறுத்துரை, என்று பொழி பெயர்த்து விட்டது. அதாவது தன்னுடைய மந்திரிசபை சரணுகதி வற்புறுத்தலையிட்டு இன்னும் சில நாட்களில் மறுத்துரை வழங்கும்' என்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கொடுத்துவிட்டது. இதே மொழி பெயர்ப்பை நேசநாடுகளுக்கான தனி அலை வரிசையிலும்ஒலிபரப்பிவிட்டார்கள். சில நாட்கள் கழித்து குரோசிமாவிலும் நாகசாகிலும் அணுகுண்டு விழுந்தது. இரண்டு லட்சம் உயிர்கள் பலியாகின.

—எடுத்தாளன்.


மக்னெற்றே றிவைண்டிங் ரேடியோ
முதலிய வேலைகள் செய்பவர்

**விக்ரேஸ்**

கிளை ஸ்தாபனம்:
23, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

தொழிற்சாலை:
6, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | ர | ன் | ■ | 3 க | | | ல் |
| ல | ■ | ண | ■ | ■ | ■ | 4 | ண் | | ■ |
| 5 | ம் | | ர் | ■ | 6 | | | ■ | ■ |
| ம் | ■ | தி | ■ | 7 | | கை | ■ | 8 | 9 |
| ■ | 10 க | ■ | 11 | ■ | 12 | | | ■ | ந் |
| 13 | | | | யா | ■ | 14 | த | | |
| ல் | ல | ■ | 15 | ப் | 16 | ங் | | ல் | ■ |
| 17 | வ | | ■ | ■ | 18 | ட் | டி | ■ | 19 |
| 20 | | தி | ர | | ■ | 21 | னை | ■ | ட் |
| ர் | | ■ | 22 | க | | ■ | 23 | கு | |

பெயர்:................................ விலாசம்:................................

வயது:...................... ................................

(மாதமொரு முறை)

**இடமிருந்து வலம்** —— **மேலிருந்து கீழ்**

1. சூரியனின் மறுபெயர்.
3. இரவை இப்படியும் கூறுவர்.
4. சமீபம்
5. இராமாயணத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர்.
6. பத்திற்குள் ஓர் எண்.
7. உடம்பை இப்படியும் கூறுவர்.
8. நவக்கிரகங்களில் ஒன்று.
12. மைசூர் பிருந்தாவனத்தை அழகுசெய்யும் நதி.
13. புராதன எகிப்தியரின் புகழ்பெற்ற நகரம்.
14. தற்காலத்தில் மலிந்த செய்தி.
15. தமிழனின் திருநாள்.
17. இராமனின் மகன்.
18. மேடு.
20. உடையை இப்படியும் கூறுவர்.
21. பூலோக கற்பகதரு என நாம்கூறும் விருட்சம்.
22. தினம்.
23. சிரித்திரனில் உள்ள கேள்விகளுக்குத் தகுந்த பதில் கொடுக்கும் ஆசான்.

1. பெண்களை அழகுபடுத்தும் சின்னம்.
2. பிள்ளையாரின் மறுபெயர்.
9. பாண்டவரின் தாயார்.
10. புத்தபிரான் பிறந்த புனித இடம்.
11. பெண்.
13. இந்த அரசர்களின் காலத்தில் இந்தியாவில் சிறப்புக்கலை உன்னத ஸ்தானத்தை அடைந்தது.
16. கழுதை ...... சுமக்கும்.
19. கலசம்.

## போட்டி நிபந்தனைகள்

1. ஒருவர் எத்தனை கூப்பன் அனுப்ப விரும்பினாலும் நிரப்பி அனுப்பலாம். அவைகள் அனைத்தும் சிரித்திரனில் வெளிவந்தவைகளாக இருக்கவேண்டும்.
2. கூப்பன்களுக்கு கட்டணம் எதுவும் இல்லை. இலவசம்'
3. கூப்பன்கள் யாவும் குலுக்கப்பட்டு, முடிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட சரியான விடைக்கே முதற் பரிசு அளிக்கப்படும். இரண்டாம், மூன்றும், நான்காம் பரிசுகளும் கூப்பன்களின் கிரமப்படி அளிக்கப்படும்.
4. முதற் பரிசு பெறுபவரின் புகைப்படம் அவர் விரும்பி அனுப்பினால், சிரித்திரனில் பிரசுரிக்கப்படும்.
5. போட்டியின் விடைகளும் பரிசு பெறுபவர்களின் பெயர் விலாசம் ஆகியன எதிர்வரும் மாத சிரித்திரனில் பிரசுரிக்கப்படும்.
6. விடைகள் அனைத்தும் தெளிவாக விளங்கும் வகையில் எழுதப்பட்டிருக்கவேண்டும்.
7. ஆசிரியரின் தீர்ப்பே சரியானது.
8. போட்டிக் கூப்பன்கள் அனைத்தும் சாதாரண தபாலில் அனுப்பப்படவேண்டும். பிரதி மாதமும் 25ம் திகதி காலை 11 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக, சிரித்திரன் 67, பிறவுண் வீதி, யாழ்ப்பாண. என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

**சிரித்திரனை இலவசமாகப் பெறப்போகிறீர்கள்!**

**இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்!**

முதற் பரிசு—சிரித்திரன் பத்திரிகை 16 மாதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

இரண்டாம் பரிசு—சிரித்திரன் பத்திரிகை 12 மாதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

மூன்றுவது பரிசு — சிரித்திரன் பத்திரிகை 9 மாதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

நான்காவது பரிசு—சிரித்திரன் பத்திரிகை 6 மாதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

**சிந்தியுங்கள் சிரித்திரன் உங்களிடம் தேடி வருவான்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜூன் 'சிரித்திரன்'**

## குறுக்கெழுத்து போட்டிமுடிவு

**மேலிருந்து கீழ்**

1. ஆதி
3. யாழ்தேவி
4. பாரதம்
8. கள்
9. நக்கீரர்
11. நாகசகி
12. வாத்து
14. வசதி
15. கம்பு
19. மாரிசன்

**இடமிருந்து வலம்**

1. ஆதித்தன்
3. யாழ்பாடி
5. திங்கள்
6. சூழ்
7. ரகு
8. கனி
10. தேர்தல்
11. நாள்
13. விஷம்
16. சற்சதுரம்
17. கலை
18. அரிமா
20. அரிவரி
21. பகவத்கீதை
22. வால்மீகி
23. அனுமான்

முதலாவது பரிசைப் பெறும் அதிர்ஷ்டசாலி—

வி. பரமேஸ்வரி 'வல்லிபுரவாசா' கரவெட்டி வடக்கு, கரவெட்டி.

இரண்டாவது பரிசைப் பெறும் அதிஷ்டசாலி—

இ. இரவீந்திரன் 44, செட்டியார் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.

மூன்றுவது பரிசைப்பெறும் அதிஷ்டசாலி—

பா. சண்முகராஜா மே/பா சி. பாலசுப்பிரமணியம் புளியங்கூடல், ஊர்காவற்றுறை.

4-ம் 5-ம் 6-ம் பரிசுகளைப் பெறும் அதிஷ்டசாலி—


(4) எஸ். யசந்தா மே/பா எல். கே. சுப்பையா பள்ளச்சேனை கரடியாறு மட்டக்களப்பு.

(5) வி. எஸ். சற்குணம் 14, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-6

(6) க. வே. தங்கராசா 60, தேவநம்பியதிஸ்ஸ மாவத்தை, கொழும்பு-5.

பரிசு பெற்ற வாசகர்கள் தங்கள் முகவரி பிழையாக இருந்தால் உடனே சரியான முகவரியை ஒரு போஸ்ற் காட்டில் எழுதி எமக்கு அனுப்பிவைக்கவும்.

—ஆசிரியர்




★......சிந்தைக்கு விருந்தான சிரித்திரனே, சித்திரைத் திங்களில் திகட்டாத பல்சுவையும் விந்தைச் செய்தி பற்பலவும், கும் அன்ட் விஜியும், எண்ணிலடங்கா எழுத்தாளர் கற்பனையும் கொண்டு வாரய்!

—சி. சசிகலாதேவி மட்டுநகர்.

★......சிரிக்கவைக்கும் சிரித்திரனே, இச்செகத்தினில் உன்புகழ் நிலைக்கும்.

—அடம்பனூர் இளவல், அடம்பன்.

★......சிரித்திரன் தன் சேவையை மாதந்தோறும் தவருமல் மகிழ்ச்சியடைகின்ருேம் கூடிய விரைவில் ஆசிரியர் கூறியிருப்பதுபோல் மாதம் இரு இதழாக வந்து வார இதழாக வெளிவரவேண்டும் என்பதே எங்கள் அவா.

—சிங்களவாடிமூர்த்தி மட்டுநகர்.


★......சிரித்திரன் சிரிப்பூட்டுவது மட்டுமல்ல, சிந்தனையையும் ஊட்டி அறிவைப் புகட்டுகின்ருன்.

—கிருபாகரன், மட்டக்களப்பு.

★......'சிரித்திரன்' மாதமிருமுறை நம்மைச் சிரிக்க வைக்கப்போகிருனு? மிக மிக மகிழ்ச்சி, அவன் வளரவேண்டும். நீண்ட காலம் வாழவேண்டும் நம்மையெல்லாம் சிரிக்கவும் சிந்திக்கவும் செய்யும் பணியில் முன்னேறி வெற்றி காணவேண்டும்.

—சி. யோகேஸ்வரி, சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**எ. தனபாலசிங்கம், கரவெட்டி**

**கே.** தமிழ்ப் பிரதேசங்களைப் பற்றித் தங்கள் கருத்து யாதோ?

ப. தமிழ் பிரதேசத்தில் தார் உருகும், மனிதன் உருக மாட்டான். பஸ்ஸில் பெண்களுக்கு எழுந்து இடங்கொடுக்கவும் மாட்டான். சீதனமில்லாத பெண்ணுக்கு இருதயத்தில் இடமும் கொடுக்க மாட்டான்.

ஃ

**சாரதா தம்பிராசா, பம்பலப்பிட்டி, கொழும்பு.**

கே. கடவுளுக்கும் உமக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப. கடவுள் இருப்பவர், நான் நிற்பவன், கடவுள் துரும்பிலும் இருப்பார் தூணிலும் இருப்பார். நான் பஸ்ஸிலும் நிற்பவன், ரயிலிலும் நிற்பவன்.

ஃ

**எஸ். தவபாலன், உடுப்பிட்டி.**

கே. யாழ்ப்பாணத்தின் நிறைவும் குறைவும் என்ன?

ப. பாடசாலைகள் ஏராளம் ஏராளம்... தொழிற்சாலைகள் கம்மி கம்மி.

ஃ

**மு. செ. செல்வன் இரின் எஸ்டேன், கலகா.**

கே. ஏழைகள் கண்ணீருக்கும் பணக்காரன் கண்ணீருக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப. ஏழை வருமானம் இல்லையே என்று கண்ணீர் வடிக்கிறான். பணக்காரன் வருமான வரி கட்டவேணுமே என்று கண்ணீர் வடிக்கிறான்.

ஃ

## பரிசுக் கேள்வி

**எஸ். தியாகராசா, மேபீல்டி வீதி, கொட்டாஞ்சேனை.**

கே. எமது சைவ உணவுச் சாலைகளைப்பற்றித் தங்கள் கருத்து என்ன?

ப. அங்கு வாழை இலையுமுண்டு, வாழும் இலையான்களும் உண்டு.

**மு. பெரியசாமி, மாத்தளை.**

கே. எமது மேடைப் பேச்சாளரைப் பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?



ப. பண்பைப் பற்றி பல நேரம் மேடையில் பிதற்றுவார்கள் ஆனால் பண்பாக குறிப்பிட்ட நேரத்திற்கு கூட்டத்திற்கு வரமாட்டார்கள்.

ஃ

**எ. எஸ் இப்றாஹீம், பாலநகர், மூதூர்-2.**

கே. ஒரு ஆணுடைய வாய்ப் பேச்சுக்கா அல்லது ஒரு பெண்ணுடைய கண் வீச்சுக்கா சக்தி அதிகம்.

ப. பெண்களின் கண்ணைத் தானே புலவர்கள் பாடியிருக்கிறார்கள். ஆண்களின் வாயைப் பாடவில்லையே!

ஃ

**க. பீற்றர், புனிதந்தோனியார் கொவில் வீதி, சாவகச்சேரி.**

கே. நிலையற்ற வாழ்வில் நிலையான தொழிலைத் தேடுவதெப்படி.

ப. நிலையுள்ள தொழில் இல்லைத்தம்பி. நாம் ஐம்பது வயதில் பென்ஷனில் ஓடிவிட வேண்டும்.

ஃ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புஷ்பராணி நடேசன், 23, புராண விகாரமாவத்த, கொழும்பு-6

கே. மனச்சாட்சியைப் புறக் கணித்து வாழ்பவர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரையாது.

ப. மனிதனுக்கும் மிருகத்திற்கும் உள்ள ஒரே ஒரு வித்தியாசம்... மனிதனுக்கு மனச்சாட்சி உண்டு, மிருகத்திற்கு இல்லை. மனச்சாட்சியை புறக்கணிக்க விரும்புபவன் மிருகமாகிறான்... மிருகத்திற்கு ஏது புத்தி மதி.

ஜெகதீஸ்வரி முருகேசு, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

கே. சிரித்து மகிழவைக்கும் சிரித்திரனைப் படிக்கும் மக்கள் சிந்தித்து செயலாற்றுவார்களா?

ப. ஆம்! யூன் இதளில் 'கிளியைப் பிடித்து இறகைக் கத்தரித்து கூட்டில் வைத்து ரசிப்பதுதான் அழகுரசனை எனப் பதில் எழுதியிருந்தேன்...அதைப் படித்த வாசகநேயர்தான் கூட்டில் சிறைப்படுத்திய கிளிக்கு சுதந்திரம் கொடுத்து விட்டதாக எழுதியிருந்தார்.

சி. தங்கவேலு, வல்வெட்டித்துறை.

கே. பெண்ணிற்கும் பூவுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப. பெண்ணிற்கு மறுமணம் உண்டு பூவிற்கு இல்லை... மணம் இழந்தால் இழந்ததுதான்.

எ. யோகநாதன், கண்டி.

கே. நீர் பஸ் பிரயாணத்தையா விமானப் பிரயாணத்தையா விரும்புவீர்?

ப. பஸ் பிரயாணம். விமானம் பழுதுபட்டரல் இறங்கித் தள்ளமுடியாதே?

கே. சந்தானம்' பதுளை.

கே. ஏன் அண்ணா, நீங்கள் தமிழ்ப்படங்களை நினைத்து இரத்தக் கண்ணீர் வடிக்கிறீர்கள்.



ப. கண்ணகிக்குச் சிலை எடுத்த தமிழ் நாட்டில் பெண்கள் சேலையில்லாமல் நடிக்கிறார்களே யென்றுதான்.

பொ. கலைச்செல்வி, ஏழாலை.

கே. வாழ்கை ஏன் சிலருக்கு கசக்குகிறது சிலருக்கு இனிக்கிறது.

ப. போதும் என்று புன்னகை செய்யும் மனைவி உள்ளவனின் வாழ்க்கை இனிக்கிறது. போதாது என்று பொன்நகை செய்விக்கும் மனைவி உள்ளவனின் வாழ்க்கை கசக்கிறது.

எ. எல். காசிம், ரிம்பிதிக்சாய வீதி, கொழும்பு-5

கே. அமரிக்கன் சந்திரமண்டலத்தை ஆராய்ச்சி செய்கிறான். உங்களுக்கு சூரிய மண்டலத்தை ஆராய்ச்சி செய்ய முடியுமா.

ப. கூலிங்கிளாஸ் அணிந்து கொண்டு சூரியனுக்கு ஒழித்துத் திரியும்போது சூரியனை எப்படி அடியேன் ஆராய்ச்சி செய்ய முடியும்.

எஸ். தவாரசா, பஸஸ்ஸ் லேன் வெள்ளவத்தை.

கே. சும்மா என்ற சொல்லை நம்மவர் சரளமாகப் பாவிப்பதின் மர்மமென்ன?

ப. அவர்கள் தத்துவஞானிகள். நாம் உலகில் சுமமா உடையில்லாமல் பிறந்தபடியால் சும்மா என்ற சொல்லை சும்மா பாவிக்கிறார்கள்.

இ. ஆறுமுகராசா. பூதவராயர் வீதி, திருநெல்வேலி கிழக்கு, நல்லூர். யாழ்ப்பாணம்.

கே. அழாத குழந்தைக்கும் மேடையில் பேசாத அரசியல் வாதிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப. அழாத குழந்தைக்கு பால் கிடைக்காது... மேடையில் பேசாத அரசியல்வாதிக்குஒரேஞ் பார்லி கிடைக்காது.

சி. சிதம்பரநாதன், கொடிகாமம்.

கே. நான் எனும் ஆணவம் கலைஞனுக்கு நல்லதா.

ப. ஆணவம் உள்ளவனால் அழகுபடைக்க முடியாது, அமர அஜாந்தாஓவியம் தீட்டியவர்கள் தமது பெயரை ஓவியத்திற்கு கீழ் எழுதவில்லையே.

**மகுடி,**

**மே/பா. 'சிரித்திரன்'**

**67, பிறவுண் வீதி,**


**யாழ்ப்பாணம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி. எஸ். ரி. பிலிம்ஸாரின்


# குத்துவிளக்கில் ★




'கவலை' என்ற மூன்றெழுத்து 'மனம்' என்ற மூன்றெழுத்தை வாட்டும்போது "ஆறுதல்" என்ற நான்கெழுத்துத்தேவைதானே!
(ஹீகாந்த்-கந்தசாமி)



கூர்மைக்கும், நேர்மைக்கும் ஒப்பான பெண்களை குத்துவிளக்கு என்பர். இங்கே குத்து விளக்கின் 'சுடர் அவலப்படுவதின்' காரணமென்னவோ?—(இந்திரா)



புல்லாங்குழல் ஊதுவதிலும் ஓர் இனிமை, பிளாவில் கள்ளை ஊதிக்குடிப் பதிலும் ஓர் இனிமை.



இது கல்லோயா அல்ல, களுத்துறை அல்ல, தும்பளை, சுத்தமான தும்பளை நல்லெண்ணை
(சிசுநாகேந்திரா—யோகா)

# ★ சில காட்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருள்

—இலதலை நடராஜன்

**“காதலிலே தோல்வி என்பது விதியினாலே ஆத்மாவுக்கு விதிக்கப்படுகிற தண்டனை என்று நான் எண்ணுகிறேன். அந்த எண்ணத்தினாலே மானசீகமாக அந்தத் தண்டனையை அனுபவிக்கிறேன்”.**

அந்தப் பழைய காலத்து ஸ்டவ்வின் மேல் இருந்த அலுமினியச் சட்டியில் உலைநீர் கொதித்துக் கொண்டிருந்தது.

ஆசிரியர் கந்தையா அரிசியைக் களைந்து கொண்டிருந்தார். அவரது பழகிய கைகள் இயந்திர கதியில் இயங்கிக் கொண்டிருந்தன.

நல்ல மதர்ப்பான உடம்பு. 'அவர்' என்னும் ஆத்மாவை அந்த உடலம் சிறையெடுத்து முப்பத்தெட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. நாற்பதானாலும் இருபத்தைந்துக்கான உடல் வளம் அவருக்கு.

நேரம் ஏழரை மணிக்குமேல் ஆகியிருக்காது. அதற்குள் சமையல் தொடங்கிவிட்டது. சமைத்துச் சாப்பிட்டுவிட்டு மிகுதியை மத்தியானத்திற்கும் இரவுக்கும் என்று பத்திரப்படுத்திவிட்டு வெளியேறினால் பகலில் சுமார் ஒருமணிக்கு வந்து அரை மணித்தியாலத்துக்குள் மீண்டும் வெளியேறி இரவு ஒன்பது மணிக்குத் திரும்புகிற வழக்கத்தை இந்த ஊருக்கு வந்ததில் இருந்து அவர் கடைப்பிடித்துவருகிறார்.

வழக்கம் என்பதைவிட அதுவும் ஒரு வாழ்க்கை என்பதும் பொருத்தம்தான்.

சொந்த ஊரிலிருந்து இடமாற்றம்பெற்றுஇங்குவந்து பத்து ஆண்டுகள் ஆகின்றன.

பள்ளிக்கூட நேரம் போக எஞ்சிய நேரத்தில் வீட்டுக்கு வீடு சென்று டியூசன் சொல்லிக் கொடுப்பதையும் அவர் வழக்கப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

சமையலை முடித்துச் சாப்பிட்டுவிட்டு அவர் புறப்பட்ட போது, அவரிடம் டியூசன் படிக்கிற அந்தப்பையன் அவரைத் தேடிவந்தான். அவர் நெற்றியைச் சுருக்கி அவனைப்பார்த்தார்.

சார். எங்க வீட்டுக்கு முன்புறமாக இருக்கிற பங்களாவுக்கு நேத்து அதன் சொந்தக்காரங்களே குடிவந்திருக்காங்க. அங்கே இருக்கிற பையனையும் நம்ம ஸ்கூலிலே சேர்க்க ஏற்பாடு பண்ணியிருக்காங்களாம். எங்க அம்மா கூட அவனோடை அம்மா பேசிக்கிட்டிருந்தபோ அவனுக்கு டியூசன் கொடுக்கனும்கறதைப் பத்தி பேசினாங்க. எங்க அம்மா உங்களைப் பத்தி சொல்லிச்சு அவங்க உங்களைக் கூட்டிக்கிட்டு வரச் சொன்னாங்க.'

பையன் மூச்சுவிடாமல்கூறி முடித்தான்.

'சரி வா போகலாம்'

அவர் அவனுடன் கூட நடந்தான். அன்றைக்குப் பள்ளிக்கூடம் கிடையாது டியூசன்களும் மத்தியானத்திற்குப் பிறகுதான் ஆரம்பம்.

பங்களா நெருங்கிவிட்டது. அந்த பங்களாவை அவர் தினமும் பார்க்கத்தான் செய்கிறார்.

பங்களாவை நெருங்கியதும் அவர் சற்று உற்றுப் பார்த்த வண்ணம் நடந்தார், பூஞ்சட்டிகளுடன் கூடிய அந்தாரியம் செடிகள் வாயிலின் இருபுறத்தையும் அழகுபடித்திக் கொண்டிருந்தன. வரும்போது இவற்றையும் கொண்டுவந்திருப்பார்கள் என்று அவர் எண்ணிக் கொண்டார்.

---

'வார்' எனும் ஆங்கிலச் சொல்லிற்கு தமிழ் போர்.

'போர்' எனும் ஆங்கிலச் சொல்லிற்கு தமிழ் வார்.

—யாரோ.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையன் உள்ளே நுழைந்ததைத் தொடர்ந்து அவரும் நுழைந்தார்.

'இருங்க சார் நான் சொல்லிவிட்டு வர்ரேன்.' பையன் உள்ளே நுழைந்தான்.

அந்தப் பெரிய கூடத்தில் நிறைந்து கிடந்த சோபாக்கள் ஒன்றில் அவர் அமர்ந்துகொண்டார்.

உள்ளே போன பையன் திரும்பிவந்தான்.

'சொல்லிவிட்டேன் சார்... இப்ப வருவாங்க அவங்க மகன் வேலைக்காரனோட டவுனை சுத்திப் பார்க்க போயிட்டானும். நான் வீட்டுக்குப் போகனும், சார்...'

'சரி!'


பையன் போய்விட்டான். கூடத்துச் சுவரில் கிடந்த ஒரு பெரிய படத்தின் மீது அவர் பார்வை நிலைத்தது. அந்தப் படத்தில் இருக்கும் மனிதர்தான் அந்தக் குடும்பத்தின் தலைவராக இருக்கும் என்று ஆசிரியர் எண்ணிக்கொண்டார்.

அதற்கு அடுத்திருந்த படத்தில் அவர் பார்வை நிலைத்து அந்த உருவைக் கிரகிக்க முயன்ற கணத்தில்,

'டீ சாப்பிடுங்க! என்று ஒரு பெண்குரல் எழுந்தது.

அவர் தலை சாய்ந்திருந்த நிலையிலேயே தேனீர் கோப்பையை எடுத்து அருந்தத் தொடங்கினார். அந்நிலையில், மேல் இமைகளின் எல்லையை விழிகள் தொட்டபோது அந்தப் பார்வை மட்டத்தில் அந்தப் பெண்ணின் கால்கள் மட்டும் தெரிந்தன.

'உங்களுக்கு சொந்த ஊரே இதுதானா?'



அந்தப் பெண்ணின் குரல் அமைதியின் மோனத்தைக் கலைத்தது. இப்போது இந்தக் கேள்விக்கு என்ன அவசியம்?

அவர் மெல்ல நிமிர்ந்து அந்தப் பெண்ணைப் பார்த்தார். அந்தக் கேள்வியின் அவசியம் அவருக்குப் புரிந்தது. அதோடு, பத்து ஆண்டுகளுக்குமுன்சொந்த ஊர்ப் பள்ளிக்கூடத்தில் தம்மோடு ஆசிரியையாகப் பணியாற்றிய கோமதியை அத்தனை ஆண்டுகளுக்குப்பிறகு இப்போது அவர் கண்டார்,

திருமணம் செய்துகொண்டு சொந்த ஊரைவிட்டுச் சென்ற பிறகு இன்றுதான் அவளும் அவரைக் காண்கிறாள்.

'இந்த ஊருக்கு வந்துரொம்ப நாளாச்சா' அவள்தான் கேட்டாள்.

'நீ... நீங்க ஊரைவிட்டுப் போனபிறகு நான் இங்கே வந்திட்டேன்.'

அவள் சொன்னாள்;

அவர் காலமாகி நாலு வருசம் ஆச்சு. அந்த ஊர்லே தொடர்ந்து இருக்கப் பிடிக்கலே. மகனையும் அழைச்சிக்கிட்டு இங்கே வந்துட்டேன். இந்த பங்களாவும் எங்களுக்குச் சொந்தமானது தான். அங்கே ஊர்லேயும் ஒரு பங்களாவும், வயல், தென்னந்தோட்டம் எல்லாம் இருக்கு, அதுகளை குத்தகைக்கு விட்டிருந்தேன். அதுகளைக் கவனிக்கறது ரொம்பச் சிரமம், அதோடு பயலைப் படிக்கவைக்க வசதியான பள்ளிக்கூடமும் இல்லை. அதனுலேதான் இங்கே வந்துட்டோம். ஆமா! உங்களுக்கு குழந்தைங்க?

'இல்லே'

'இல்லியா'? அவள் குரலில் வியப்புத் தெரிந்தது.

---

முதல் புளுகன்: என்னுடைய அப்பா முந்திப் பெரிய செல்வந்தர்... நாணயக்காசு எறிந்துதான் காகம் கலைப்பாங்க.

இரண்டாம் புளுகன்: என்னுடைய அப்பா பெரிய வயிர வியாபாரியாக இருந்தவர்... வயிரக்கல் எறிந்துதான் நாய் கலைக்கிறவர்.

அதிமதுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சம்சாரம்'

'இன்னும் கல்யாணம் பண்ணிக்கல்லே.'

'நிஜம்மாவா?'

'இதில் ஆச்சரியப்படறதுக்கு எதுவும் நீ... மன்னிக்கணும்; பழைய ஞாபகம், நீ நீன்னுதான் பேச வருது... நீங்க ஆச்சரியப் படறதுக்கு ஒன்னும் இல்லே. காதல்லே தோல்விங்கறது விதியினாலே ஆத்மாவுக்கு விதிக்கப்படுகிற தண்டனையின்னுதான் நான் எண்ணிக்கிட்டிருக்கிறேன். அந்த எண்ணத்தினாலே மானசீகமா அந்தத் தண்டனையை அனுபவிக்கிறேன்.'

கோமதி மெல்லிய குரலில் பேசினாள்.

'உங்களுக்கு தோல்விங்கறப்போ எனக்கும் தோல்விதான். காதல்ங்கற பந்தயத்தில் கலந்துக்கிற ஆண், பெண் இரண்டு பேரிலும் ஒருத்தருக்கு வெற்றின்னா மற்றவர்க்கும் வெற்றிதான் அதே போல தோல்வின்னாலும் ரெண்டு பேருக்கும் தான்.'

அவர்கள் இருவர் மனதிலும் தங்களால் எவ்வாறு இப்படிப் பேச முடிகிறது என்ற எண்ணம் ஏற்படத்தான் செய்தது.

'நீங்க சொல்றது புரிகிறது. நீங்க அந்தப் பந்தயத்திலிருந்து வாபஸ் வாங்கிட்டதாகத்தான் நான் இப்ப நெனைக்கிறேன். ஏன்னா'...

அவள் ஏதோ சொல்ல முயன்றாள். அவர் கையமர்த்தி விட்டுத் தொடர்ந்தார்.

'ஒரு பெண்ணுக்கு கண் நிறைஞ்ச கணவன் கிடைக்கனும் கறதைவிட கை நிறைஞ்ச கணவன் கிடைக்கனுங்கறது தான் நடைமுறைக்கு ஒத்துவர்ற தத்துவம்.'

'என்னைப் பொறுத்தவரையில் நான் ஏமாந்திட்டதாகவோ அல்லது ஏமாத்தப்பட்டதாகவோ நெனைக்கல்லே. அப்படி நினைக்க என் மனோபலம் இடம் தரல்லேன்னுதான் நெனைக்கிறேன். அதனாலேதான் அதைத் தோல்வியா ஏத்துக்கிட்டு இந்தத் தண்டனையை அநுபவிக்கிறேன்.'

அவர் தம் பேச்சை நிறுத்திவிட்டு அவளைப் பார்த்தார். அவளிடம் முன்பு குடிகொண்டிருந்த அழகும் கவர்ச்சியும் இன்னும் முற்றாக விடைபெற்றுக்கொண்டுவிடவில்லை. நின்றுகொண்டிருந்த அவள் தலை குனிந்தவண்ணம் தனக்கு முன்னால் இருந்த சோபாவின் விளிம்பைத் தடவியவாறு பேசினாள்.



'நீ உன்னுடைய உயிர் நண்பனோடு இப்போ கோபமாமே... காரணம் என்ன?

'என்னை விட்டிட்டு தனியேபடம் பார்க்கப்போன துரோகி'

—அதிமதுரம்.

'நீங்க சுத்தி வளைச்சு என் மேலே குற்றம் சொல்ல வர்றது எனக்குப் புரியுது. தாய் தகப்பனோட பேச்சைமீறி நடக்கற நிலையிலே அன்னைக்கு நான் இல்லே. பெண்களிடத்தில் இயற்கையா அமைஞ்சிருக்கற பலவீனம் அதாவது பெற்றோர்க்கு பயந்து நடக்கற தன்மையினாலே தான் அவங்களுக்கு தங்களுடைய இஷ்டம்போல நடக்க முடியிறதில்லை. ஒரு வகையிலே அந்த பலவீனம்கூட அவங்க மேலுள்ள பாசத்தினாலும் மரியாதையினாலும் தான் ஏற்படுது. சிலபேர் இதிலிருந்து மாறுதலாக நடக்கத்தான் செய்றாங்க. நான் பொதுப்படையாச் சொல்றேன். அந்த பலவீனம்தான் உன்னையும் அப்படி நடக்க வச்சிட்டுது.'

அவள் சற்று பேச்சை நிறுத்திவிட்டு மீண்டும் தொடர்ந்தாள்.

'இந்த மானசிகமான தண்டனையை நீங்க அனுபவிக்கக் காரணமான நானே அந்த தண்டனையிலிருந்து உங்களை விடுவிக்க முயற்சி செய்யலாமில்லே?'

அவள் சற்று நிறுத்திவிட்டுக் கேட்டாள்.

'நான் தப்பா ஏதாவது பேசிவிட்டேனா?'

'இல்லே இதிலே தப்புங்கறதுக்கு இடமேயில்லை. பத்து வருஷத்துக்கு முன்பு நாம ரெண்டு பேரும் கடைசியாப் பேசிக்கிட்டப்போ நீங்க சொன்னது ஞாபகத்துக்கு வருது.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் நிதானித்துவிட்டுக் கேட்டார். 'பேட் டு யூ ப்லீப் இட்? விதி என்பதை நீ நம்பு கிருயா?

'நிச்சயமா, இல்லேன்னு இத்தனை வருஷத்துக்கப்புறம் இப்படிப் பேசிக்கொள்ளும் வாய்ப்பு கெடைக்குமா?'

அவள் சொல்லிவிட்டு அமைதியாக நின்றுள். அவருடைய கேள்விக்கான காரணம் அவளுக்குப் புரியவில்லை. தான் எப்போதோ கூறிய வாசகங்களைக் கொண்டு அவர் தன்னை மடக்கப் பார்க்கிருரோ? என்ருேர் எண்ணம் அவளுள் எழுந்தது.

'ஆமா பையன் நாலாம் வகுப்புத்தானே படிக்கிருன்.

அவர் பேச்சின் திக்கை மாற்றியது அவளுக்குப் புரிந்தது-

'ஆமா! நீங்க படிப்பிக்கிறதும் பள்ளிக்கூடம்தானுமே. அந்தப் பையன் சொன்னுன். அங்கே சேர்க்கத்தான் ஏற்பாடு பண்ணியிருக்கிறேன்.'

''எனக்கு மோனிங் செஷன் ஈவினிங்லேதான் டியூசன் எல்லாம்.'

'அவன் அஞ்சு மணிக்கு பள்ளிக்கூடம் விட்டு வருவான். அஞ்சரையிலே இருந்து ஒரு மணி நேரம் படிப்பிச்சாக் காணும்.'

'அதே நேரத்திலே எனக்கு வேருெரு இடத்திலே டியூசன் இருக்கு. டைம் செட் பண்ணிக்கிட்டு நாளைக்கு முடிவு சொல்றேன். சரி அப்ப நான் வர்றேன்.''

'சரி'

அவர் வாயிற் படியை நோக்கி நடந்தார். அவள் சொன்னுள்.

'முடிவு சாதகமானதா இருக்கனும்னுதான் நான் விரும்பறேன்.'

அவள் விரும்புகிற அந்த முடிவு.

அவர் தாம் தெரிவிக்கவேண்டிய முடிவைப் பற்றி சிந்திக்கத் தொடங்கினுர்.

'ஒருவன் ஒருத்தியைக் காதலிக்கத் தொடங்கியதுமே, கட்டவிழ்த்துக் கொண்டு கண்ட பக்கமெல்லாம் பாய்ந்த அவனுடைய இளமையின் வேகம் நிறைந்த எண்ணங்கள் ஒரு முகப் படுத்தப்பட்டு நல்லுணர்வுகளாக விரிகின்றன.'


அவள் தந்த இழப்பை வேறுருத்தியின் மூலமாக ஈடுசெய்துகொள்ளவும் அவர் முயலவில்லை. கோமதியுடன் கொண்ட காதலால் பக்குவப்பட்டுப்போன அந்த மனம் அந்தப் பக்குவ நிலையினின்றும் விடுபட விரும்பவில்லை.

சொந்த ஊரில் அவளைக் கடைசிபாகச் சந்தித்த போது அவள் கூறியது இப்போது அவர் நினைவுக்கு வந்தது.

'விதிப்படிதான் எல்லாம் நடக்கும். விதியை மீறி நம்மாலே செய்ய முடிவது ஒன்னுமில்லே. எனக்குக் கொடுத்து வச்சது அவ்வளவுதான். உங்களை ஏமாத்தனும்னு நான் கனவிலே கூட நினைக்கல்லே!'

தன் முடிவுக்காக அவள் அன்று கூறிய காரணங்கள் அனைத்தையும் அவர் ஏற்றுக் கொண்டார்.

இரண்டு மணி நேரத்துக்கு முன்புவரை கூட அந்த ஏற்புக்கு மாருன கருத்துக்களை அவர் எண்ணத் தலைப்படவில்லை. ஆனுல்.



மனைவி: உங்க பிறந்த தினத்தைசிறப்பாகக்கொண்டாட வேணும்.

கணவன்: கண்டிப்பாக... உம்முடைய சாப்பாட்டோடு உயிரோடு இருக்கிறேனே... அதைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டாமா!

---

கோமதி தன்னுடைய செல்வ நிலையை வாழ்க்கை சிரமமானதாக இல்லை என்கிற ஹோதாவில் உற்சாகத்துடன் கூறியது. அவர் மனதில் ஏதேனும் கிலேசத்தை மூட்டிவிட்டதோ? அவர் அப்படித்தான் எண்ணிக்கொண்டார்,

ஆனுல், தம்முள் முற்பட்ட மாற்றம், சற்றுமுன் அவளோடு பேசிய பேச்சுக்களின் தோற்றம் யாவுமே மிக மிக இயல்பானவை என்பது மட்டும் அவருக்குப் புரிந்தது.

தாம் மானசீகமாக அனுபவிக்கும் தண்டனையிலிருந்து தம்மை விடுவிப்பதாக அவள் கூறியதைப்பற்றி அவர் மனம் சிந்திக்கத் தொடங்கியது.

அவளுக்கு ஏன் அப்ப்டி ஓர் எண்ணம் ஏற்பட வேண்டும்.

தம்மைத் தனிமையில் ஆழ்த்தி விட்ட பாவத்திற்கு கழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய் தேட எண்ணுகிருளா? அல்லது.

சிந்தனையைத் தொடர்வது அவருக்கே அருவருப்பாய் இருந்தது.

ஆசிரியர் தம் அறையை அடைந்தபோது தாம் அவளுக்குத் தெரிவிக்க வேண்டிய முடிவு முடிவுகள் பற்றியே அவர் மனம் சிந்தித்துக் கொண்டிருந்தது.

இறுதியாக அவர் அந்தக் கடிதத்தை எழுதஉட்கார்ந்தார்.

'அன்புள்ள கோமதி அறிவது'

தொடர்ந்து எழுதுவதை நிறுத்திவிட்டு யோசித்தார். பின்னர் அந்த வாசகத்தைப் பேனையால் அழித்துவிட்டார்.

'திருமதி' என்று எழுத எண்ணினர். அதுவும் பொருத்தமாகப் படவில்லை. அந்த வரியை நிரப்பாமல் கடிதத்தைத் தொடர்ந்தார்.

'உங்களுக்கு சாதகமான பதில் அளிக்க முடியாமைக்கு வருந்துகிறேன். நாளை முதல் இரண்டு வாரங்களுக்குப் பள்ளிக்கூடத்தில் விடுமுறை எடுத்திருக்கிறேன். அதோடு சொந்த ஊருக்கே மாற்றம் கேட்டு எழுதியிருக்கிறேன். அப்படியில்லா விட்டால் வேறு ஊருக்கு மாற்றம் கேட்டிருக்கிறேன். இந்த ஊர் வாழ்க்கை சலித்துவிட்டது. ஏன்இந்தவாழ்க்கையே சலித்துவிட்டது.

தங்களுக்கும் சாதகமான முடிவை அளிக்க முடியாமைக்கு மீண்டும் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்.''

அவர் கடிதத்தை முடித்து விட்டு நிமிர்ந்த போது, கோமதியின் வீட்டுக்கு அவரை அழைத்துச் சென்ற அந்தப் பையன் இன்னெரு பையனுடன் அறைக்குள் நுழைந்தான்.

''சேர் இவன்தான் அந்தப் பையன் கணேசன்'

'ம்' அவர் தாம் எழுதிய கடிதத்தை பிரித்தார். அன்புள்ள கோமதி அறிவது என்று எழுதி அழித்த இடத்திற்குக் கீழ்


'கணேசனுடைய தாயார் அறிவது' என்று எழுதி அந்தப் புதிய பையனிடம் கொடுத்தார்.

'இதை உங்க அம்மாவீடம் கொடு''

சிறுவர்கள் வெளியேறினர்கள். ஆசிரியரிடமிருந்து நீண்டதொரு பெருமூச்சு கிளம்பியது.

ஃ

---



ஒருவர்: எப்படி மாப்பிள்ளை பணவிஷயத்தில் இறுக்கம் தானே?

மற்றவர்: களிசான் விஷயத்தில் நல்ல இறுக்கம் காசு விஷயத்தில் இறுக்கமில்லே.

—ஜோக்கிரடீஸ்.

## காப்பி

ஐரோப்பாவிலேயே அதிகமாகக் காப்பி குடிப்பவர்கள் சுவீடன் நாட்டைச் சேர்ந்த ஸ்கெண்டினேவியர்கள் தான் ஒவ்வொருவரும் வருடத்திற்கு 31½ (முப்பத்தொன்றரை) இறாத்தல் காப்பித்தூளைப் பானமாக்கி அருந்துகிறுர்கள்.

## வெள்ளைப் பூண்டு

வெள்ளைப் பூண்டை வெகுவாகப் பயன்படுத்தும் மக்கள் போர்த்துக்கல்காரர்கள்தான்.

## டப்பா உணவு

தகரத்திலடைக்கப் பட்ட உணவுப் பொருட்களை அதிகமதிகமாகப் பாவித்துப் பழக்கப் பட்டு விட்டவர்கள் பிரிட்டிஷ்காரர்களே. அடைக்கப்பட்ட பழவகை ஜாம், கெல்லி என்றால் கொள்ளை ஆசைதான்.

## கார்

லண்டன் மாநகரில் எந்தத் தெருவழியாகப் போனாலும் சரி, வீதியின் கால்வாசிப் பகுதியை 'கார்நிறுத்துமிடம்' எப்பொழுதும் ஆக்கிரமித்துக் கொண்டே இருக்கும். ஐரோப்பாவில் சரி பாதிக் குடும்பத்தினர் கார் வைத்திருப்பவர்களே இவர்களில் முக்கால் வாசிப்பேர் தங்களுடைய கார்களைத் தாங்களே கருவிக் கொள்பவர்களாகும்.

## டெலிவிஷன்

ஐரோப்பாவிலுள்ள வீடுகளில் நான்கில் மூன்று வீடுகளில் டெலிவிஷன் உண்டு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ் யாத்திரை

எஸ். பி, கிருஷ்ணன்

காலை மணி 8.15.

பருத்தித்துறை பஸ் யாழ்ப்பாண ஸ்டான்டிலிருந்து புறப்படும் நேரம்.

கணபதிப்பிள்ளை ஓடிவந்து பஸ்சில் ஏறி சாரதிக்குப் பின்னாலிருக்கும் சீட்டில் அமர்ந்துகொண்டு, கண்டக்டரைப் பார்த்து, 'தம்பி இது இப்ப வெளிக்கிடுமே?' என்று கேட்டார்.

கணபதிப்பிள்ளையின் அவசரத்தைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு, இதோ புறப்படுகிறது' என்ற கண்டக்டர் 'டிக்கற்' எழுதத் தொடங்கினார்.

'பெரியவர் எங்க...'

'பருத்தித்துறை தம்பி...'

கண்டக்டர் டிக்கற் எழுதியபடி நகர்ந்து கொண்டிருந்தார்.

'ஏன் தம்பி... பஸ் ஓட ஓட டிக்கற்றை எழுதினாலென்ன... ஒன்பதரைமணிக்கு புறக்கிராசி யாரை கோட்டிலை சந்திக்க வேணும்...'

அதே வேளை பஸ்சில் ஏறிய சாரதி தன்சீட்டில் அமர்ந்து பஸ்சை எடுத்தார்.

கணபதிப்பிள்ளை ஒரு அமைதிப் பெருமூச்சு விட்டார்.



**● கண்டக்டருக்கு பத்திக்கொண்டு வந்தது. கிழவருக்கு குமரியோடை சேட்டை. அவள் இறங்கட்டும். கிழவருக்குக் குடுக்கிறேன்.**

கஸ்தூரியார் றோட்டைக் கடந்து, ஸ்ரான்லி வீதியில் திரும்பி ஓடி புத்தவிகாரைக்கு முன்னால் நின்று சில பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட பஸ் ஆரியகுளச் சந்தியைக் கடந்து அடுத்த சந்திக்கருகில் நின்று ஒருவரை ஏற்றிக்கொண்டு அப்பால் சென்றது.

'இதென்னடா... இது நேரத்துக்குப் போகாது போலை கிடக்குது...' கணபதிப்பிள்ளையின் வாய் முணுமுணுத்தது.

நல்லூர் பின்வீதி ஸ்டான்டில் நின்று நாலுபேரை ஏற்றிக்கொண்டு முத்திரைச் சந்தியில் திரும்பி கடுகதியில் ஓடிக்கொண்டிருந்த பஸ் நாலைந்து ஸ்டாண்டுகளைக் கடந்துவிட்டது.

கணபதிப்பிள்ளையின் முகம் மலர்ந்து கொண்டிருந்தது.

இருபாலைச் சந்தியில் பஸ் நின்றது. பள்ளிக்கூடப் பிள்ளைகளும், ஆசிரியருமாக பத்துப் பேர்வரை ஏற்றிக்கொண்டிருந்தார்கள்: கடைசியாக ஏறிய பெண்ணொருத்தி கையில் புத்தகங்களோடு கணபதிப்பிள்ளையின் அருகில் அமர்ந்தாள்; வேறு இடம் இல்லாததால்.

'பஸ்' புறப்பட்டது.

இப்போது 'பஸ்' நிரம்பி விட்டுது. பஸ் நடுவே நிற்பவர்கள் கைகளை மேலுயர்த்தி கம்பியை இறுகப் பிடித்துக்கொண்டனர். பஸ் விரைவாக ஓடிக்கொண்டிருந்தது. கோப்பாய்ச் சந்தியை அடுத்து, டி. ஆர். ஓ. கந்தோருக்கு சமீபமாக ஒரு 'துரை'யை இறக்கிவிட்டு ஓடிக்கொண்டிருந்த பஸ் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின்



குமார்: ஏன் குமார் சினிமா நடிகையை கவர்ச்சி நடிகையென்கிறது.

ரகு: சஞ்சிகைக் 'கவர்'இல் அவர்கள் படம் பிரசுரிப்பதால் கவர்ச்சிநடிகையென்று சொல்கிறது.

ஜோக்கிரட்டீஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகில் சில மாணவர்களை இறக்கிவிட்டு, பதிலுக்கு நாலு மனிதர்களை ஏற்றிக்கொண்டு, விரைந்தது.


மேடு பள்ளங்களில் ஏறி இறங்கி ஓடும் பஸ்சின் வேகம் ஓர் இன்ப வேகம். கணபதிப் பிள்ளையின் கண்கள் களிநடம் புரிந்துகொண்டிருந்தன, இளம் பெண் ஒருத்தி அருகில் இருந்து அடிக்கடி இடிக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த குலுக்கும் 'பஸ்'சை வாழ்த்திக்கொண்டிருந்தாரா? அல்லது பஸ்சின் வேகம் கண்டு கோட்டிற்குஉரிய நேரத்திற்குப் போய்விடலாம் என்ற நம்பிக்கையால் களித்திருந்தாரா?

நீர்வேலி கந்தசாமி கோவிலைத்தாண்டிப் போய்க்கொண்டிருந்தது பஸ். கோவிலைக் கண்ணுற்ற கணபதிப்பிள்ளை 'அப்பனே முருகா' என்று தன் இரு கைகளையும் எடுத்து கும்பிட்டவர், உதிலை முந்தியெல்லாம் அசல் திருவிழா நடக்கும் இப்ப... எல்லாம் காஞ்சிபோய்க் கிடக்கு...! என்றார்.

அருகில் இருந்த பெண்மணிக்கு சிரிப்பு வந்தது: புத்தகத்தால் வாயை மூடிக்கொண்டு சிரித்து முடித்தாள்.

அவர் ஏதோ சொல்லுவதையும், அருகில் இருக்கும் இளம்பெண் சிரிப்பதையும், நின்றபடியே கவனித்த கண்டக்டருக்கு பற்றிக்கொண்டுவந்தது. 'கிழவருக்கு குமரியோட சேட்டை அவள் இறங்கட்டும், கிழவருக்கு குடுக்கிறன்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டார்.

'ஆவரங்கால் சந்தியில் பஸ் நின்றது. சந்திக்கடையின் ரேடியோவில் மேளவாத்திய முழக்கம் கேட்டது.



கணவன்: நான் இறந்தால் நீ உடன்கட்டை ஏறுவியா?

மனைவி: உடன் கட்டை ஏற முடியாது என்பதுதான் என் பெரும் கவலை... மின்சாரத்தால்தானே கொழும்பிலே எரிப்பது.

—ஜோக்கிரடீஸ்,

'அசல் மேளம் உது... இந்தியாமேளமாயிருக்க வேணும்...' என்றபடி தலையை ஆட்டி தாளம் போட்டுக்கொண்டார் கணபதிப்பிள்ளை.

கண்டக்டர் மீண்டும் கவனித்தார். கணபதிப்பிள்ளையின் தலை தாளம் போட்டதையும், பற்கள் தெரிந்ததையும் கண்டு 'இவரை எழுப்பி நிற்க விட்டால்தான் சரி' என்று எண்ணியவர்... 'சரி இருக்கட்டும்' என்று பொறுத்துக்கொண்டார்.

பஸ் அச்சுவேலியை அடைந்தது. அடைபட்டுக்கிடந்த பிரயாணிகளில் முக்கால் பங்கு பேரும் இறங்கி விட்டார்கள். கணபதிப்பிள்ளையின் அருகில் யாருமில்லை.

'என்னதம்பி நேரம்' என்று கேட்டார்; பின்சீட்டில் இருந்த 'துரை' ஒருவரைப் பார்த்து. '9-10' என்றார் அவர்.

'த்...செ... மெத்தச் சென்டுபோச்சு. இன்னும் எட்டுக் கட்டை கிடக்கு. இதேன் பஸ் நிக்குது!' என்று இரைந்தார்.

டைம்கீப்பர் வந்து சாரதியிடம் நேரஅட்டவணையை வாங்கி எழுதிக் கொடுத்தார்.

'கச்சான்'

இரு பையன்கள் 'பஸ்'ன் உள்ளேவந்து நின்று வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள்.

'அட இவர்கள் 'பஸ்'சைப் போக விடான்கள்' என்று முணுமுணுத்த கணபதிப்பிள்ளை, 'இறங்கடாமோனை 'பஸ்' போகப் போகுது' என்றார், ஒரு பையனைப் பார்த்து.

'எனக்குத் தெரியும் 'பஸ்' போறநேரம் நீர் சும்மா இரும்' என்று முகத்தில் அடித்தாற்போலப் பதிலளித்த பையன் பஸ்சைவிட்டிறங்கினான்.

கணபதிப்பிள்ளை மறுபக்கம் பார்த்துக்கொண்டார்.

பஸ் அச்சுவேலியை விட்டுப் புறப்பட்டது. வயல், தோட்ட வெளிகளில், நிலத்தை பண்படுத்தும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த விவசாயிகளையும், வரிசையாக நடப்பட்டு செழிப்பாக வளர்ந்திருந்த புகையிலைக் கன்றுகளையும், மிளகாய்ச் செடிகளையும், பார்த்து அதிசயப் பட்டு, 'ஆ... என்று வாயைப் பிளந்தபடி இருந்தார் கணபதிப்பிள்ளை.

மந்திகைச் சந்தியில் 'பஸ்' நின்றபோது மற்றத்தெருவால் ஓடிவந்த 'பஸ்'சைக் கண்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர். 'எட தம்பி இந்த டிக் கட்டோடை அந்த பஸ்சிலை போகலாமே. அதைக்கொஞ்சம் நிற்பாட்டு;'

'அது சாவகச்சேரிக்குப் போகுது' என்றான் பின்னுலிருந் தவன்'.

'ஏன்... என்ன அவசரம்' என்று கேட்டபடி கணபதிப் பிள்ளைக்கு அருகில் போய் அமர்ந்தார் கண்டக்டர்.

இப்பொழுது பஸ்சில் பத்துப் பதினைந்பேர்தான் இருந் தனர்.

தெருப்பள்ளம் ஒன்றில் பஸ் விழுந்து, எழுந்து ஓடியபோது கண்டக்டர் கணபதிப்பிள்ளையுடன் மோதிக்கொண்டார்.

கணபதிப்பிள்ளை அகன்று இருந்துகொண்டார்.

"குமரியளோடை இடிபட்டால், சுகமாயிருக்கும் என்ன...? 'என்ற கண்டக்டரை கவலை யோடு பார்த்து, 'என்னதம்பி பகிடி விடுறீர்...' என்ருர்.

'அந்த டீச்சரோடை கொஞ்சநேரம், வெகு கலகலப்பாயிருந்தீர்... இப்ப என்னேடை முட்டுப்பட்டாப்போலை தள்ளி இருக்கிறீர்...''

'சீச்...சி அப்படி யெல்லாம் சொல்லாத தம்பி... நான் வயசு போனவன்...'

'வயசு போகட்டும்... ஆனலும், ஆசைபோகாது.'

மூத்த விநயகர் கோவிலுக்கு முன்னல் நின்று இருவரை ஏற்றிக்கொண்டு புறப்பட்டது பஸ்.

அவர்களுக்கு ரிக்கட் எழுதிக் கொண்டு எழுந்த கண்டக்டர், வேருெரு சீட்டில் போய் அமர்ந்து கொண்டார்.

'நேரம் என்னதம்பி' என்று கேட்டு பின்னல் திரும்பினர் கணபதிப்பிள்ளை.

'9-30' என்ருர் பின்னுலிருந்தவர்.


'அடக் கடவுளே நீதவான் வாற நேரம்' என்ற சொற்கள் சாரதியின் காதுகளில் விழுந்தது. மேலும் வேகமாக ஓடியது பஸ்.

'என்ன வழக்குப் பெரியவர்' என்று கேட்டபடி மீண்டும் வந்து கணபதிப்பிள்ளையின் பக்கத்தில் இருந்தார் கண்டக்டர்.

'கொஞ்சம் சாராயம் வைச்சிருந்தனுன் தம்பி, என்ர பாவிப்புக்கு எண்டு. கூடியவரை சொல்லிப் பாத்தன... அவன்கள் வழக்குப் போட்டுட்டான்கள்.

ஆறுமாதம் கிடைக்கும் போய்விட்டு வாரும்' என்ருர் கண்டக்டர்.

---



ஒருவர்: என் மனைவியின் பலன் தான் என்னைச் செல்வந்தனுக்குமென்று சோதிடம் சொன்னங்க...

மற்றவர்: ஏன் சோதிடம் பலித்ததா?

ஒருவர்: ஓ...நேற்று இரவு ஆறுதல் பரிசு கிடைக்க கனவு கண்டனுன்.

—ஜோக்கிரடீஸ்.

'அவ்வளவுக்குப் போகாது ஒரு 50 ரூபா குற்றம் அடிப்பாக' என்ருர் பின்னுலிருந்தவர்.

கணபதிப்பிள்ளை சொன்னுர்

'ஏன் தம்பி கசிப்புக்காச்சி கலக்கிறவன்களை யெல்லாம் மறியலுக்கா அனுப்புறுங்களா? அவன்களை விட்டிட்டு, ஒரு போத்தல் வைச்சிருந்த என்னை பிடிச்சிருக்கிறுன்களே!'

பருத்தித்துறை மார்க்கட்டைச் சுற்றி ஓடி கோட்டடித் தெருவில் திரும்பியது பஸ்.

'கொஞ்சம் நிற்பாட்டு தம்பி இதிலை இறங்கி விடுகிறன் ஓடிப்போயிடலாம். நேரம் போச்சு...' என்றபடி எழுந்த கணபதிப்பிள்ளை, பஸ் திரும்பிய வேகத்தில் தடால் என விழுந்தார். நல்ல காலம் இருந்த சீட்டிலேயே விழுந்தார்; காயமெதும் மில்லாமல் தப்பினுர்.

பஸ் நிலையத்தை அடைந்து நின்றது, கணபதிப்பிள்ளை எழுந்து, இறங்கி ஓட்டமும் நடையுமாக நீதிமன்றம் நோக்கி விரைந்தார்.

ஃ

அங்கே, நேரம் 9-45 ஆகியிருந்தது.

தனக்காக கதைக்க ஏற்படுத்தியிருந்த பிரக்கிராசியார் உள்ளே இருப்பதைக் கண்டு சைகை காட்டி அழைத்தார். பிரக்கிராசியார் சிலநிமிடங்கள் கழித்து வெளியே வந்தார்.

'ஏன் காணும் நேரத்துக்கு வரவில்லை நீதவான் பிடிவாரண்டு போட்டுவிட்டார்.'

நடுநடுங்கிய கணபதிப் பிள்ளை, 'நேற்று யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனாப்போலே, வர நேரமில்லாம போச்சுதையா, இன்டைக்கு காலமை 'பஸ்' ஒண்டு கண்ட இடமெல்லாம் நிண்டு... நிண்டு இப்பதான் வந்து சேர்ந்திது'

'சரி சரி' இப்ப ஏன் பயப்படுகிறீர்... எனக்கு வேற வளக்கிருக்குது... எடும் பீசை...'

கணபதிப்பிள்ளை மடியைக் குலைத்து, காசைப் பொறுக்கி எண்ணினார். இருபத்தைந்து ரூபாய். பிரக்கிராசியாருக்குத் தெரிந்துவிட்டது.

'என்ன காணும் 25 தான் வைச்சிருக்கிறீர் போலிருக்கு. வளக்கு வெண்டு தாறதெண்டால் 50 ரூபா தரவேணும் என்றல்லோ சொன்னனான்....

'இப்ப பிடிவாரண்டெண்டு சொல்லிறியள்...?'

'சரி 25 இப்பத்தாரும். அடுத்த தவணைக்கு உம்மை விடுதலையாக்கித்தாறன்... நிண்டு கொள்ளும் ஒரு மோசன், எழுதி நீதவானுக்குக் கொடுக்கவேணும்...'

பிரக்கிராசியார் விரைந்து உள்ளே போனார். இரண்டு நிமிடம் கழித்து மீண்டும் வெளியே வந்தார். கணபதிப்பிள்ளையைக் கூப்பிட்டுச் சொன்னார். 'நாளைக்கு என்னைச் சந்தியும்...'

கணபதிப்பிள்ளை, கோட்டிற்கு வெளியே வந்தார். பஸ் நிலையத்தை நோக்கி நடந்தார்.

பிடிவாரண்ட் என்று சொன்னாரே! அதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே இந்தப் பிரக்கிராசியார்... காசையும் வேண்டிக் கொண்டு...

கணபதிப்பிள்ளையின், மூளை வேலைசெய்து கொண்டிருந்தது.

அவரைப் பிடிவாரண்டிற்கு இலக்காக்கிய பஸ் யாழ்ப்பாணம் போகத் தயாராகிக் கொண்டிருந்தது.

கணபதிப்பிள்ளை அதில் ஏறி ஒரு மூலையில் அமர்ந்தார்.

(யாவும் கற்பனை)

ஃ


பிறவுண்சன்

பிஷ்மக்ஸ்

இப்பொழுது உங்கள் வளர்ப்பு மீன்களுக்கு அதிக மகிழ்ச்சியை அளிக்கிறது.




பிறவுண்சனின் பிஷ்மக்ஸ் மீன்களின் இயற்கை உணவாகிய 'பிளாங்ரன்' சேர்க்கப்பட்டுள்ளது.



## அப்பாவி ஆசிரியர்

ஒரு நாள், கலாசாலையிலிருந்து உபகரணங்களைச் சுமந்து கொண்டு படிப்பித்தல் பயிற்சிக்காக புதுப்பாடசாலை ஒன்றின் வகுப்பறையினுள் பயிற்சி ஆசிரியர் ஒருவர் புகுந்தார்.

ஆசிரியருக்கு எழுந்து மரியாதை செய்யவேண்டிய மாணவர்கள் தலை திரும்பிய பக்கங்களுக்கு ஓடத்தொடங்கினார்கள். ஏனெனில், ஆசிரியரின் வகுப்பறைப் பிரவேசம் அவ்வளவு பிரமாதமாக இருந்தது.

புதுவகுப்பைக்கண்ட ஆசிரியரின் முகம் விகாரமாகக் காட்சி அளித்ததால், மாணவர்கள்வகுப்பினுள் நுழையப் பயந்தனர்.

பிள்ளைகளை ஆசிரியர் அழைத்தபோதும் அவர்கள் வரவில்லை. அதன்பின், ஆசிரியர் இனிப்பு வாங்கிக் கொடுத்து ஒருவாறு மாணவர்களை வகுப்பறைக்கு அழைத்தார்.

ஆசிரியர் ஒருவாறு பாடத்தை ஆரம்பிக்க முற்பட்டார்.


பாட ஆரம்பத்தில் புலியைப் பற்றிப் படிப்பதற்காக ஒரு படத்தை கரும்பலகையில் பதித்தார். 'இது என்ன படம்?' என ஆசிரியர் கேட்டார். பதில் இல்லை.

'இதுதான் புலியின் படம்' என்றார். 'இல்லை இது பூனையின் படம்' என்றனர் மாணவர்கள்.

இதற்குமேல் ஆசிரியரால், எதுவுமே சொல்ல முடியவில்லை. பாடத்தின் ஆரம்பத்தை முடிக்கு முன்னமேயே மணியோசை கேட்டது. —பலப்பிட்டி அருஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பெங்குவின் பறவை

★ பறவாத பறவைகளில் ஒன்று பெங்குவின் ஆகும். இப் பறவை துருவப்பகுதிகளில் (முனைவுப் பகுதிகளில்) காணப்படுகின்றது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இப் பறவையின் முன்னோடிகள் பறந்து திரிந்தன; இவை உணவிற்காகக் கூடிய பொழுது கடலில் கழித்ததால், இவற்றின் உறுப்புக்களும் காலப் போக்கில் மாற்றமுற்றன. இறகுகள் வளர்ச்சி குன்றி, நீந்துவதற்கேற்ற 'துடுப்புகளாகக் குறுகின. இன்று இப் பறவைகளுக்கு பெரிய சிறகுகள் இருந்தாலும் அவை பறக்கமாட்டா. ஏனெனில், அவற்றின் உடல்கள் கொழுத்து பருமனுனதாகக் காணப்படுகின்றன. 90 இறாத்தல் நிறையுள்ள பெங்குவினும் உண்டு.

★ புறாக்கள் ஒரு மணித்தியாலத்தில் 40 மைல்கள் பறக்கக் கூடியன; காற்றின் போக்கில் இவை பறந்தால் இன்னும் வேகமாகப் பறக்கும் சக்தி உடையன. புறாக்களுக்கு வழிகாணும் இயல்பு அதிகம். அவற்றை எங்கு கொண்டுபோய் விட்டாலும் அவை தம்மிடத்திற்குத் திரும்பி வந்து சேர்ந்துவிடும். பழைய காலத்தில் புறாக்களை ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்குச் செய்திகள் அனுப்புவதற்காகப் பழக்கி வைத்திருந்தார்கள்.

# குள்ளநரியும் குருட்டுமுதலையும்

—குட்டிமாமி—

ஒரு நதிக்கரையோரத்தில் அடர்ந்து படர்ந்திருந்த புதர்களின் இடையே ஒரு நரி வசித்து வந்தது. இந்நரி தந்திரம் நிறைந்த குள்ளநரியாகும். இங்குள்ள நரி ஒரு தடவை விட்டதவறை மறுதடவையும் விடாது. அயலிலுள்ள கிராமங்களில் இந்நரி தனக்குத் தேவையான உணவைத் தேடிக் கொள்ளும். நதியில் நீரை அருந்திக்கொள்ளும். இந்நதியில் ஒரு கிழட்டு முதலை வசித்து வந்தது. நதியில் நீர் அருந்தவரும் மிருகங்கள் மிகவும் கவனமாகவே போய்ப் பழகும். ஆனால், இந்த முதலைக்கு இந் நரி ஒருபோதும் பயப்படவில்லை. 'உது ஒரு புத்திகெட்ட முதலை' என்பது நரியின் எண்ணம்.

ஒருநாள் அயலிலுள்ள கிராமத்திற்கு உணவு தேடிக் குள்ள நரி சென்றது. நரியைக் கண்ட சேவல், உடனே பறந்து ஒரு மரத்தின் கிளையில் அமர்ந்து கொண்டது.

'பயப்படாதே சேவல் அண்ணே! நான் சாப்பிட்டுவிட்டேன்... நீ மிக இனிமையாகக் கூவுவாய்... அதைக் கேட்பதற்காகவே வந்தேன். பயப்படாமல் கீழே வந்து ஒருதரம் எனக்காகக் கூவு...' என்றது குள்ள நரி.

சேவலும் நரியின் வார்த்தையில் மயங்கி, கீழே பறந்து வந்து, பெருமையோடு கழுத்தைஉயர்த்தி 'கொக்கரக்கோ...' என்று கூவியது. அவ்வளவுதான் திடீரெனப் பாய்ந்து சேவலைப் பற்றிய நரி, காட்டைநோக்கி ஓடத்தொடங்கியது. இதனைக் கண்ட கிராமமக்கள் தங்கள் நாய்களுடன் நரியைத் துரத்தினார்கள். இன்று எப்படியாவது இந்த நரியைக் கொன்று விடுவதாகக் கூக்குரல் இட்டார்கள்.

சேவல் ஒரு தந்திரம் செய்தது.

'அவர்கள் கூறுவதை நீ கேட்டாயா? உன்னுடைய வீரம் என்ன...! நீ இப்போதே நின்று அவர்களுக்குச் சொல்... உன்னைப் பிடிக்க முடியாது என்று...' என்றது சேவல்.

தற்பெருமை அடைந்த நரி பிழை செய்தது, திடீரென நின்று ஏதோ கூறுவதற்கு வாயைத் திறந்ததுதான் தாமதம், சேவல் 'விர்'ரெனப் பறந்து மரம் ஒன்றில் அமர்ந்து கொண்டது. ஏமாந்த நரி திகைத்து நின்றது. நாய்கள் நெருங்கி வருவதைக்கண்டு, தன்னைக் காப்

---

★ கிறிஸ்தோபர் கொலம்பஸ் என்பவரே அமெரிக்காவை முதன் முதல் கண்டு பிடித்தவர் என்று படித்திருப்பீர்கள். ஆனுல் கொலம்பஸ்சுக்கு 500 ஆண்டுகளுக்கு முன் ஸ்கண்டுநேவியன் நாட்டைச் சேர்ந்த வைக்கிங்ஸ் எனும் இனத்தினர் அமெரிக்காவை அடுத்துக் காணப்படும் பகாமாத்தீவுகளையே கண்டு பிடித்தார்.

—கமலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாற்றிக் கொள்வதற்காக ஓட்டமாய் ஓடியது.

இப்போது நரிக்கு மிகுந்த தாகம்; நதிக்கு ஓடி வந்து, ஒரு மரத்தின் வேர்கள் இடையே நின்று நீரை ஆவலோடு குடித்தது. நீரினுள் மரக்கட்டை போலக் கிடந்த கிழட்டு முதலை 'லபக்'கென்று நரியின் காலைக் கவ்விப் பிடித்தது.

நரி பயந்துபோய் விட்டது. திடீரெனச் சேலல் செய்த தந்திரம் நினைவுக்கு வந்தது. 'கக்கக்...கக்...' எனக் குள்ளநரி சிரித்தது.

'இந்தக் குருட்டு முதலையைப் பாரேன்... என் கால் என்று நினைத்து மரவேர் ஒன்றைக் கவ்விப்பிடித்திருக்குது...' என்றது. இதனைக்கேட்ட முதலை நரியின் காலுக்கு அருகில் இருந்த மரவேரைக் கவ்வியது.

'உயிர்தப்பியது, கடவுள் புண்ணியம்' என்றபடி, தாவி ஓடியது குள்ளநரி. கிழட்டு முதலை மரவேரை நீரினுள் இழுத்துப் பார்த்தது. ★

(மூலம்: ஆங்கிலம்)

★


**அடுத்த இதழில்:**

'காட்டிலே போர்' என்ற பாலர்கதை இடம்பெறுகிறது. மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் இடையில் நிகழ்ந்தபோர்.

குட்டிமாமி எழுதுகிறார்.



# பழைய ஊர்வன



எடாபோசொறஸ் டிமெற்றோடன்

படம்: 'ராலி' விளக்கம்: 'குண'

மெசேசோயிக் என்ற யுகத்தில் வாழ்ந்து அழிந்துபோன பழைய ஊர்வனவே, மேலுள்ள படத்தில் காணப்படுகின்றன. இவை இன்றைய முதலைகளைப் போன்று காணப்படினும், பருமனிலும் நீளத்திலும் உறுப்பமைப்பிலும் வேறுபட்டன. இப்பழைய ஊர்வன ஏறத்தாழ பதினாறு அடிகளுக்கு மேல் நீளமானவை. எடாபோசொறஸ் என்ற ஊர்வன தாவர பட்சினிகளாகும்; இது மிகவும் சாதுவானது. உருண்டையான உடலையும் குறுகி ஒடுங்கிய கண்களையும் இது கொண்டிருக்கும். டிமெற்றோடன் என்ற ஊர்வன மாமிசபட்சினிகளாகும். கூர்மையான பற்களையும், அகன்ற பயங்கர விழிகளையும் அசாத்திய வலிமையான உடலையும் இது கொண்டிருக்கும்.

இப்பழைய ஊர்வன இரண்டும், தம் முதுகுகளில் பாய்மரச் சீலைகள் போன்ற, உயர்ந்து விரிந்த வன்மையான 'முதுகு ஓடுகளை'க் கொண்டிருக்கின்றன. 'குளிர் இரத்தமுடைய இப்பிராணிகளுக்கு, சூரியனிடமிருந்து சூட்டைப் பெறும் 'ரேடியேற்றர்கள்' போல இம் முதுகு ஓடுகள் உதவின' என உயிரியலாளர் கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடைமையுணர்வும் சேவை மனப்பான்மையும் இருக்கவேண்டிய உள்ளங்களில் கரப்பொத்தான்கள் குடியிருக்கின்றன.**

# காதில் நுழைந்த கரப்பொத்தான்

**எம். எஸ். பசுபதி**

காலை 10 மணி அன்று நோன்மதிக்கு முந்நாள் லீவான படியால்றோட்டில் நிற்கின்றேன்.



கொழும்புப் புதினங்கள் ஊர்ச்சமாசாரங்கள் பற்றி அலசுகின்றோம். கொழும்பிலிருந்து ஊருக்குப் போகும் புதிய அரசாங்க ஊழியர்களுக்கு இதுதான் வேலை நாங்களதற்கு விதி விலக்கா?

திடீரென்று அலறிப்புடைத்துக் கொண்டு ஓடிவந்தாள் என் தங்கை தவம். 'அண்ணா அண்ணா' என்றாள். என்ன என்ன என்றேன். தம்பியின்ரை காதுக்குள்ளை என்னமோ கறுப்பாயிருக்குது. அவன் குளறிக் கூத்தடிக்கின்றான் இஞ்சை ஓடிவா வந்து என்னவெண்டுபார்' என்றாள். 'காதுக்கை என்னடியிருக்கும் காதுக் குறுமியோ கிறுமியோ குத்து தாக்கும்' 'இல்லையண்ணா அதுக்குக் காலும் கிடக்குது.'

போய்ப்பார்த்ததும் தான் விளங்கிச்சுது காதுக்கை கரப்பொத்தான் பூச்சி உள்ளிட்டு இருந்த சங்கதி. விஷய மறிந்த என் அம்மா ஓடிவந்தாள். உப்பைக் கரைத்து உள்ளுக்கை விடட்டா அல்லது உள்ளியை வைக் கட்டுமா என்றார். அம்மா! உப்பும் வேண்டாம் புளியும் வேண்டாம் இதெல்லாம் பழங்காலத் தாக்கள்தான் மோட்டுத் தனமாய் செய்வினம் நான் உதிலை எங்கடை ஆசுப்பத்திரியிலை கொண்டுபோய் எடுப்பித்துக் கொண்டுவாறன் என்று தம்பியையும் கூட்டிக்கொண்டு ஆஸ்பத்திரியை நோக்கி நடந்தேன்.

"கடவுளையும் தேடிக் கண்டு பிடிச்சுடலாம் எங்கடை டாக்



குத்தரைக் கண்டு பிடிக்கேலாது' இது எங்கடை யூரிலை கதைக்கிற கதை ஆனால் அன்று ஆஸ்பத்திரியிலை டாக்குத்தரைக் கண்டதும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டுட்டுது. விசாரித்ததில் அவர் அன்றுதான் மாற்றலாகி



வந்த புதிய டாக்குத்தர் என்பதை யறிந்தேன். 'புதிய டாக்குத்தர் நல்ல மனுஷன் இனி எங்கடையாக்கள் பழுதாக்கிப் போடுவினம்.' இது கடைக்கார ஐயாத்துரையின் கதை.

'வணக்கம்!' என்று ஆரம்பித்து விஷயத்தை அதுதான் கரப்பொத்தான் விஷயத்தைச் சொன்னன். அவர் சொன்னார். 'தம்பி எனக்கு கண் நல்லாய் தெரியாது. அப்படியில்லை எண்டு நான் உதிலை கைவைத்தால் காதுக்கை இருக்கிற கரப்பொத்தானை விட்டுட்டு காதுப்பறையைத்தான் எடுப்பன்.' என்று பகிடி விட்டுட்டு உதிலை உந்தக் கடையடியிலை ஓடலிப் பொடியன் வீட்டைபோக வசுவுக்கு நிற்பன் ஓடிப்போய்க் கூட்டிவந்து எடுப்பியும்' என்றார் அந்த வயதான டாக்குத்தர். (மருந்து கலப்பவருக்குத்தான் ஓடலி என்று பெயர் எங்களூரில்)

கண்டேன் அவரை வீட்டுக்கு போகும் அவசரம் அவருக்கு-தம்பிக்கு கரபொத்தான் கொடுக்கும் அவஸ்தை. எனக்கு திரிசங்கு சொர்க்கம். ஓடலி என் நண்பர். அதனால் வந்தார் பார்த்தார் இதை இஞ்சை எடுக்கேலாது மந்திகைக்குக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போம் என்றார். (மந்திகை என்பதுவும் ஓர் ஆஸ்பத்திரியே) ஏன் ஐயா அப்பிடிச் சொல்லிறியள் என்றான் தம்பி. இல்லை தம்பி இதுக்கு இஞ்சை ஆயுதமில்லை. 5 வருடத்துக்கு முந்தி இப்படித்தான் ஒருவருக்கு 'சக்கரபாண்டியன்' காதுக்கை உள்ளட்டுது. நானும் சக்திவேல் மாதிரி எங்களிட்டைக் கிடந்த ஒரேயொரு ஆயுதத்தைக் காதுக்கை விட்டன். மெல்லமாய் திருப்பினன். அவ்வளவுதான் ஏன் என்ன நடந்தது என்றேன். சத்திவேலாகிய எங்கள் ஆயுதம் முறிஞ்சுபோச்சு. அதிலையிருந்து இண்டைவரைக்கும், அப்பிடி யாரும் வந்தால் இந்தக் கம்பியாலைதான் எடுக்கிறனான் என்று சொல்லிக் கொண்டு எடுத்தார். ஒரு கம்பியை பிடியுங்கள் தம்பியை என்றார். ஐயா காது கவனம்! காது கவனம்! என்றேன். கலங்காதீர் என்றார். நடந்தது மற்போர் தம்பி குளறுகிறான் துடிதுடிக்கிறான் வருகிறது வருகிறது என்றார் எங்கே எங்கே என்றேன் காட்டினார் பிய்ந்த கரப்பொத்தானின் பின்பகுதியை. களைத்துப் போய் விட்டார் ஓடலி, இங்கே எடுக்கேலாது என்ற பழைய பல்லவியைப் பாடினார்.

நண்பகல் 12 மணி சென்றோம் மந்திகை ஆஸ்பத்திரிக்கு. ஆஸ்பத்திரியில் சாப்பாட்டு நேரம். கியூவில் நாங்கள் பட்டினி. தம்பி வலி பொறுக்க முடியாமல் அரற்றுகிறான். தேற்றுகிறேன் ஐயா வந்ததும் எடுத்து விடுவார் என்று. நேரம் 2 மணி டாக்டர் (ஐயா) வந்தாச்சு நேரம் நகருகிறது கியூ நகரவில்லை உள்ளே எட்டிப் பார்க்கின்றேன். சனக்கூட்டம். ஆமாம் நோயாளிகள்தான். கியூவால் செல்லாமல்



குறுக்கால் சென்றவர்கள். யார் அவர்கள். பார்க்கிறேன் எட்டி பிரமுகரின் பெண் ஆஸ்பத்திரி ஊழியரின் ஆட்கள் இன்னும் எனக்குத் தெரியாத......

நேரம் 3-30 மணி போயாச்சு விஷயத்தை விளக்குகி

## யார் அவர்?

கிராமத்தில் இருப்பார்
கிராமவாசியல்ல
நகரத்தில் இருப்பார்
நகரவாசியுமல்ல
சுகத்தையனுபவிக்கும்
சுகவாசியுமல்ல
வீட்டில் அடிபடுவார்
பள்ளிவாசியுமல்ல
யார் அவர்?

விடை: விலைவாசி

—பா. ரவிசங்கரசர்மா.

றேன். பார்த்தார் டாக்டர் தம்பியை. காதையல்ல. இது இங்கே எடுக்கேலாது யாழ்ப்பாணம் கொண்டுபோம் என்றார். ஐயா தயவுசெய்து காதைப் பார்த்து விட்டு சொல்லுங்கள் என்றேன். அலுத்துக் கொண்டு பார்த்தார். 'காதின் அரைப்பகுதியைத்தான் என்னால் பார்க்க முடியும் இது என் எல்லைக்கு அப்பாற்பட்டு விட்டது' என்று அதிகாரபூர்வமான பதிலையளித்து 'சரி யாழ்ப்பாணம் போம்' என்று சொல்லி அடுத்தது என்றார். அடுத்தவர்



தரமான கதைகளுக்கு
சுவையான நாவல்களுக்கு
கருத்து செறிந்த கட்டுரைகளுக்கு
கல்கி படியுங்கள்

மாத ஜோதிடம்

—தமிழ் மாத சஞ்சிகை—

ஜோதிடரின் உதவியின்றியே
ஜோதிடம் பார்க்க
சிறந்த மாத இதழ்.

த. தம்பித்துரை அன் சன்ஸ்,
யாழ்ப்பாணம். — கொழும்பு
போன்: 82878




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறார் உள்ளே நாங்கள் வெளியேறுகிறோம்.

நேரம் 4-00 மணி தம்பி வலி பொறுக்க முடியாமல் அழுகின்றான். நான் அம்மாவின் உப்பையும் உள்ளியையும் நினைத்து அழுகின்றேன்' பசியின் வேகம் -தம்பியின் அழுகுரல் - துணிந்து விட்டேன் எதற்கும் போகிறேன் வைத்திய பொறுப்பதிகாரியிடம் (டி. எம். ஒ.) அதிகாரியின் 'நின்றுடல்' கதவைத் திறக்கிறேன். அவர் யாருடனே கதைக்கும் சத்தம் தொண்டையைக் கனைக்கிறேன். யாரது? என்ன வேணும் என்றார். மன்னிக்கவும் எக்ஸ்கூஸ்மீ ஐயா நாக்குளறுகிறது ஒருவாறுக முடிவிலிருந்து முதல் வரை எல்லாவற்றையும் சொல்லுகிறேன். கவனமாய் கேட்டார். தம்பியின் காதையும் பார்த்தார் நம்பிக்கை துளிர்விட்டது. யாருடனே ரெலிபோனில் கதைத்தார். எனக்குக் கேட்கவில்லை. வந்தார் ஒரு டாக்டர். கவனித்துப் பார்க்கிறேன் ஆமாம் எங்களை யாழ்ப்பாணம் அனுப்ப எண்ணிய அதே டாக்டர்தான். பார்த்தார் என்னை அவர் முகம் கறுத்தது சிறுத்தது கொதித்தது. விஷயத்தை ஊகித்துக் கொண்டு இவர்களை யாழ்ப்பாணம் போகவல்லவா சொன்னேன் என்று குழறினார் அதிகாரியிடம் அதிகாரி சிரிக்கிறார்.

'பறவாயில்லை எங்கை அந்த ஆயுதங்களை எடுத்துவாரும்' என்றார். எடுத்துக் கொடுத்தார் ஆயுதங்களை அதிலிருந்த ஒரேயொரு ஆயுதத்தால் எதுவித நோவோ-சிரமமோ இல்லாமல் ஒரு நிமிடத்தில் பாதிக்கரப் பொத்தானையும் எடுத்துவிட்டார் அந்தப் பொறுப்புவாய்ந்த வைத்திய மேலதிகாரி.

---



ஒருவர்: நான் இப்போ கடும் கொடும் குடும்பக் கட்டுப் பாட்டு விரதம் அனுஷ்டிக்கிறேன்.

மற்றவர்: ! ! !

ஒருவர்: என் ஒரு பிள்ளைக்கு பள்ளிக்கூடத்தில் இடம் எடுக்கப்பட்ட கஷ்டம் போதும்.

—ஜோக்கிரடீஸ்.

## நகை முத்து

(கரஸ்)

குழந்தையும் தெய்வமும் ஒன்று ஏதாவது தின்பண்டம் கொடுத்து ஏமாற்றிவிடலாம்.

ஃ

சம்சாரிகளைவிட பிரமச்சாரிகளே பெண்களைப்பற்றி கூடுதலாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள்; அவர்கள் திருமணம் செய்து கொள்ளாமல் இருக்கிறார்களே!

ஃ

கலியாணம் ஒரு விசித்திரமான ஜெயில். அதனுள் புகுந்தவர்களுக்குவருடாவருடம் தண்டனை கூட்டப்படுகிறது. பிள்ளைகள் பெறுவதன் மூலம்.

ஃ

விதியை மதியால் வெல்லலாம் என்று சபதம் கூறாதே. அப்படியேதான் நீ வென்றாலும் அதுவும் விதிதானே.

ஃ

ஆயாக்கள் - அரசாங்க உத்தியோகத்தர்கள், இருவருமே வேலைக்காரர்கள்தாம் முன்னவர்கள் குழந்தைகளைத் தாலாட்டி தூங்க வைக்கிறார்கள்; பின்னவர்கள் 'பைல்'களைத் தாலாட்டி தூங்கிக் கொள்கிறார்கள்.

ஃ






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொடர் நாவல்**

— அத்தியாயம் நான்கு —

# ஆருந்திருவிழா

வண்ணார்பண்ணை கிராமமுமல்லாத, நகரமுமல்லாத ஒரு பகுதி. பழைமையைப் பேணுபவர்களும், புதுமையை நாடுபவர்களும் வாழ்ந்து வரும் அழகிய ஊர். புதுமையின் வேகமான மலர்ச்சி கூட பழைமையால் மூடப்பட்டு கூம்பியே இருந்தது.

பல சாதி மக்கள் வண்ணார் பண்ணையில் வாழ்ந்தனர். பழையதொரு மானியமுறைக் கிராமத்திற்கு இருக்க வேண்டிய தொழிற் பிரிவுகள் சாதிப்பிரிவுகளாக அங்கு அமைந்திருந்தன. வண்ணார்பண்ணையின் மையப் பகுதியாகக் கலட்டி என்ற பகுதி விளங்கியது.

குடிசனம் செறிந்த பகுதி இது.

வேளாளர், வண்ணார், தட்டார், நளவர் எனும் நான்கு தொழிற் பிரிவினர் இங்கே வாழ்ந்து வந்தனர். வேளாளர் குடி ஆங்கில அரசாட்சி நிலவிய வேளையில் கல்வியில் சிறப்பினைப் பெற்றதால் பொருள் வளம் மிக்கவர்களாக விளங்கினர். உத்தியோகங்களும், வியாபாரங்களும் இவர்களுக்குச்சொந்தமாக இருந்தன. பணச்சிறப்பு இயல்பாகவே ஏனைய பிரிவினைத் தனக்குக் கீழ்ப்படிய வைத்துவிட்டது.

இத்தகைய ஒரு சூழலில் தான் கலட்டியின் திலகமாக அம்மன் கோயில் கொண்டிருந்தாள். சிறியதொரு கோயில். ஆனல், மாரியம்மனின் மகிமை வண்ணார்பண்ணை முழுவதும் பரவியிருந்தது.

ஆடி மாதத்தில் அம்மன் கோயில் திருவிழா ஆரம்பமாகிவிடும். பத்துநாட்கள் பகலும் இரவும் திருவிழாக்கள் கோலாகாலமாக நடக்கும். மேளக்கச்சேரிகளும், சதிர்க்கச்சேரிகளும், கதாப்பிரசங்கங்களுமாகத் திருவிழா விடியவிடிய நடக்கும்.

ஒவ்வொரு நாள் திருவிழாவையும் கலட்டியின் ஒவ்வொரு பிரிவினர் செய்து வந்தார்கள். வேளாருக்குள்ளேயே சில பிரிவுகள் இருந்தன. குடக்கர் பகுதி பொலிசர் பகுதி, செம்படவர் பகுதி, ஓவிசியர் பகுதி எனச் சில பிரிவுகள். இவர்கள் ஒவ்வொரு திருவிழாவைப் போட்டாபோட்டியாகச் செய்தனர். அதுமட்டுமன்றி, தண்டிகைத் திருவிழா நளவர் என்ற குடிமக்கள் செய்யும் விழாவாகவும், குதிரை வாகனத் திருவிழா வண்ணார் என்ற குடிமக்கள் செய்யும் விழாவாகவும் இருந்தது.

அன்று ஆறும் திருவிழா; குதிரை வாகனத் திருவிழா.

வேலுப்பிள்ளைதான் அத்திருவிழாவினைத் தன் குடிமக்களுக்காகப் பொறுப்பேற்றுச் செய்வது வழக்கம். அவ்வாண்டு அவர் சாதியினருள் திருவிழாவிற்காகச் சேர்த்த பணம் வழக்கத்திலும் அதிகமாக இருந்ததால், எவ்வாண்டும் இல்லாத அளவு விழா பெரிதாக இருந்தது.

ஆறு சிகரங்கள் அமைத்து. குலைவாழைகளை ஏராளமாகக் கட்டி அலங்கரித்தனர். மாலைகளால் கோயில் உட்புறம் எல்லாம் அலங்கரிக்கப்பட்டது.

திருவிழாவிற்கு மல்லாகத்தில் இருந்து, பொன்னு ஆச்சியின் அண்ணர் குடும்பமும் வந்திருந்தது; சின்னத்தம்பியும் வந்திருந்தான்.

சின்னத்தம்பி வீட்டில் இருந்த வேளைகளில் ராணி அவன் முன்வராது ஒதுங்கியே இருந்து கொண்டாள்.


'அக்கா, அத்தான் வந்திருக்கிருர். நல்லாக் கொழுகொழுவென்று இருக்கிருர்' என்ருன் கனகசிங்கம்.

'சும்மா போடா... வேறு வேலையில்லை...' என்று எரிந்து விழுந்தாள் ராணி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




‘ஏன் அக்கா ஒளிச்சிருக்கிறுய்?’ என்று கேலி செய்தாள், சுபத்திரா....’ பார் அக்கா, அந்தக் கண்மணியை... வெட்கமேயில்லாமல் அத்தானுடன் இருந்து ‘சளசள’ வென்று கதைத்துக் கொண்டிருக்கிறுள்...’

தலைவாசலில் இருந்து கொண்டு மாமா அவளை அடிக்கொரு தரம் அழைத்தார். ராணியும் சிரமத்தோடு போய்த்தான் வந்தாள். அவ்வேளைகளில் தற்செயலாகச் சின்னத்தம்பியை அவள் பார்த்தாள்.

அவன் தலைகுனிந்து கொண்டுதான் இருந்தான். ‘மச்சான் எப்போதுமே வெக்கறைதான்.’ முன்பு கண்டதிலும் இப்போது அவன் வளர்ந்தும் பெருத்தும் இருந்தான். மெல்லிய கோடுகளாக அரும்பு மீசையும் வைத்திருந்தான்.

‘எப்ப மச்சான், கலியாணத்தை வைச்சுக்கொள்ளலாம்’ என்று சிவக்கொழுந்து வேலுப்பிள்ளையைக் கேட்டார்.

சின்னத்தம்பிக்கு அங்கு அமர்ந்து இருப்பது சிரமமாக இருந்தது.

‘நான் கோயில் வரை போயிட்டு வாறன்... கண்மணி வாறியா...?’ என்று எழுந்தான்.

கண்மணியும் கூடவே புறப்பட்டாள்,

‘கண்மணி சட்டையை மாற்றிக் கொண்டுபோ...’ என்று குரல் கொடுத்தாள், ராணி.

அவர்கள் போனபிறகு சிவக்கொழுந்தும் வேலுப்பிள்ளையும் எவ்வளவோ பேசிக் கொண்டார்கள். வேலுப்பிள்ளை கூறிய காரணங்கள் மாமாவிற்கு ஏற்றதாகப் படவில்லை.

‘என்ன படிப்பு மச்சான்! எங்கட குடும்பத்திலை இல்லாத படிப்பு... சின்னத்தம்பிக்கு மனைவியாகக் கனக்க ஏன்படிப்பாள்... படிச்சது போதும். நிற்பாட்டு... இந்த ஆவணியிலை நாள் வைப்பம்...’

வேலுப்பிள்ளை ஒத்துக்கொள்ளவில்லை.

‘ஆம்பிளையள் எண்டாலும் பரவாயில்லை. பொம்பிளையள் படிச்சு என்ன செய்கிறது?’ என்றுள் வேலுப்பிள்ளையின் மருமகள்; இராசுவின் மனைவி.

எல்லாரும் கலியாணத்தை வற்புறுத்தியும் வேலுப்பிள்ளை ஒத்துக்கொள்ளவில்லை.

‘என் பிள்ளையள் படிக்கத்தான் வேணும். நாங்க படியாது கெட்டது போதும்...’

சிவக்கொழுந்து சற்றுக் கோபத்தோடு கேட்டார்.

‘அப்ப இறுதியா என்ன சொல்கிறுய்?...’

‘படிப்பு முடிஞ்ச பிறகு கலியாணம் நிச்சயம்!’

‘அதுவரை என் மகனைக் காத்திருக்கச் சொல்கிறுயா, மச்சான்! அது நடவாது... உன்ரை மோள் பெரிய படிப்புப்படிச்சா பிறகு பெரிய உத்தியோகந்தான் தேவை... என்ரை மகன் தோதுப்படாது... அப்ப நான் வேறிடத்திலை பார்க்கப்போறன்...’

‘என்ன அண்ணை, ராணி சின்னத்தம்பிக்கென்றே வளர்பவள்...’ என்று பொன்னு ஆச்சி குறுக்கிட்டாள்.

போட்டோ ரெக்ஸ்
10, அப்துல் ஜப்பார் மாவத்தை
கொழும்பு 12
- போன்: 35237 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நான் என்ன செய்கிறது, தங்கச்சி! உன்ரை புரிசன் எங்களை விடப் படிப்புத்தான் பெரிசு என்று நிற்கிறனே?...'

வேலுப்பிள்ளை ஏதோ கூற வாய்திறந்தார் அப்போது, கனக சிங்கம் வேகமாக ஓடி வந்தான்.

'இராசு அண்ணைக்குக் கோயிலிலை அடிச்சுப் போட்டான்கள். விதானையாற்றை மோன் தங்கராசா அடிச்சுப்போட்டான்' என்று கத்தினன்.

அந்த வீடே ஒருகணம் 'குய்யோ' என்று வீரிட்டது.

கோயில் இரண்டுபட்டு நின்றது. ஒரு புறம் விதானையாரும் அவர் பகுதியினரும்; மற்றையபுறம் வேலுப்பிள்ளையும் அவர் பகுதியினரும்.

விதானையார் பக்கத்தில் பழையவர்களும் புதியவர்களும் கொதித்தனர். வேலுப்பிள்ளை பக்கத்தில் புதியவர்கள் மட்டுமே கொதித்தனர்; பழையவர்கள் அடங்கி நின்றனர்.

'வேலுப்பிள்ளை பார்த்தாயா உன்ரை மகன் செய்கையை... தலைப்பா கட்டிக்கொண்டுகோயிலுக்குத் தோறனம் கட்டுகிறன்... நாங்களெல்லாம் இருக்கிறம் என்று ஒரு மட்டுமரியாதை இல்லாமல்...'

'கட்டாடி உன்ரை மோன் என்றதுக்காக உதோட விடுகிறன்...' என்றன் தங்கராசா.

'என்றாலும் ஐயா, உப்படிச் செய்யக்கூடாது...' என்றார் சிவக்கொழுந்து. மருமகனுக்கு விழுந்த அடி அவருக்குப்பட்டது போல இருந்தது.

'அவரை வெட்டிப் போடாமை உப்படி விட்டது பிழைத்தான்...' என்றார் விதானையார்.

7

அப்போது இராசு வீரிட்டான்;

'வெட்டிப்போட எங்கடை கை புளியங்காய் ஆயாது...'

விதானையார் கேலியாகச் சிரித்தார்.

'இனி உங்களுக்கு ஒரு திருவிழாவோ...? அது சரிவராது...'



'எங்களை இனி ஒருக்காற் தொட்டுப்பாருங்கள் பார்ப்பம்' என்று கத்தினன், சின்னத்தம்பி.

வேலுப்பிள்ளை நிலைமையைப் புரிந்துகொண்டார். வாக்குவாதம் இரண்டு பிரிவினர் மோதிக் கொள்ளும் அளவிற்கு வருவதை உணர்ந்தார். ஒருபுறம் உயர் சாதிஎன்போர்; மறுபுறம் எளிய சாதி என்போர்; ஒருபுறம் பணம்' மறுபுறம் வறுமை; ஒருபுறம் கல்வி; மறுபுறம் அறியாமையா?

ஏன் இந்த நினைவு வந்தது?

'சும்மா இருங்கடா...' என்று கத்தித் தனது பக்க இளைஞர்களை அடக்கினர் வேலுப்பிள்ளை.

'சரி, விதானையார் நடந்தது போகட்டும்... சமாதானமாகப் போவம்... திருவிழாவிற்கு சோடிக்க விடுங்க...'

'இது எங்கடை கோயில்...' என்றன் தங்கராசா. 'இனிமேல் திருவிழாவுமில்லை... கோதாரியுமில்லை... களட்டுங்கடா சிகரங்களை எல்லாம்...'

வேலுப்பிள்ளையின் பக்கத்தில் மீண்டும் கொதிப்பு எழுந்தது. வேலுப்பிள்ளை அடக்கினர்.

'உது சரியில்லாத வேலை, ஐயா...' என்றார் சிவக்கொழுந்து

'உவர் ஆர்... சரி சரியில்லாதது சொல்ல... உங்களுக்கு இனித் திருவிழா இல்லை...'

---

நீங்கள் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து உங்கள் மகள் காதலனுடன் ஓடிப்போய் விட்டதாகச் சொல்கிறீர்களே. நீங்கள் அப்போ எங்கே போயிருந்தீர்கள்?

'பெண்ணை வாழவிடுங்கள்' படம் பார்க்கப் போயிருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர் கவலை



என்னவோ ஒரு பெரிய நட்சத்திரம் நடித்துப் படம் ரிலீசானதும் ''இன்று முதல் திரையிடப்படுகிறது, நாளை முதல் திரையிடப்படுகிறது.'' என்று பிரமாதமாக பேப்பரில் அடித்துத் தள்ளுகிறார்கள். நானும் ஒரு பள்ளிக்கூடக் கட்டட நிதிக்கு ஒரு இலட்சம் நன்கொடை கொடுத்தேன். அதற்கு என் உருவப்படத்தை ''திரை நீக்கம் செய்துவைக்கப்படும்'' என்றுதான் போட்டார்கள். திரையிடப்படும் என்று போட்டுவிட்டால் என்ன குறைந்தா போய்விடும்.?

ச. ரா. பா. சர்மா,
கிருண்பாஸ்.

அம்மன் கோயில் வீதி நிறையச் சனம் நிறைந்துவிட்டது.

'வண்ணாரப் பிள்ளையளுக்கு வந்த கெவரைப் பார்' என்றான் தங்கராசா. அவன் அவ்வாறு கூறி முடித்ததுதான் தாமதம், அவன்மீது வீரிட்டபடி புலியெனப் பாய்ந்தான் சின்னத்தம்பி, வேலுப்பிள்ளை அவனைக் கட்டிப்பிடிக்காது இருந்தால், கோயில் போர்க்களமாக மாறியிருக்கும்.

விதானையார் நிலைமையைப் புரிந்துகொண்டார். தங்கராசா வெறிகொண்டு நிற்கிறான்.

'இந்த வருஷம் மட்டும் செய்யுங்க... இனி ஒருக்காலும் உங்களுக்குத் திருவிழா வில்லை...'

'உதெல்லாம் இனிமேல் சரிவராது, விதானையார்' என்று புதியதொரு குரல் எழுந்தது; விதானையார் பகுதியிலிருந்துதான்.

'ஆரம்பத்திலிருந்து நானும் பார்க்கிறேன், நீங்கள் பிழையைச் செய்துபோட்டு நாட்டாண்மையும் காட்டிறியள்... கோயில் ஊர்ச்சொத்து... அதிலை திருவிழாச் செய்கிறதை மறிக்க நீங்க யார்?' என்றபடி ஓர் இளைஞன் முன்வந்தான்.

ஒருகணம் எல்லார் விழிகளும் அவனைமொய்த்தன. மெலிந்த தேகம்; விழிகளில் ஆண்மை சதிராடியது.

'டேய், மகாலிங்கம்......' என்று கத்தினான், தங்கராசா. 'நீ அவ்வளவிற்கு வந்திட்டியா எளிய பொறுக்கிகளுக்காக வாதாட வந்திட்டே...'

'வாதாடினால் என்ன, தங்கராசா? பிழையைப் பிழை என்று சொல்லத்தான் எனக்குத் தெரியும். உனக்குச் சரியான சாதித்தடிப்பு... மறைஞ்சுபோகிற ஒன்றை நீ கட்டிக்காக்க விரும்புகிறாய்... சாதியும் மண்ணாங்கட்டியும்... மனிசத்தன்மை இல்லாத செயல்...'

வேலுப்பிள்ளை தங்களுக்காக வாதாடும் அவனை நன்குதெரியும். கடைக்காரக் கந்தையாவின் இளைய மகன். அவன் குணத்தையும் அவருக்குத்தெரியும். சின்னத்தம்பி மிகுந்த உயர்வோடு மகாலிங்கத்தைப் பார்த்தான்.

ஏதோ ஒருவகை மாற்றம் நிகழப் போகிறது என்ற உணர்வு அவனுக்குத் தலைதூக்கியது.

தங்கராசா வெறியனானான். ஒருபுறம் கிடைத்த அவமானத்தின் தோல்வி, மகாலிங்கத்தின் வார்த்தைகளால் மேலும் சுய அறிவை இழக்க வைத்தது. தன் பலம் கொண்டமட்டும் ஓங்கி மகாலிங்கத்தின் முகத்தில் குத்தினான்.

'பறையா'!

மகாலிங்கம் நிலைகுலைந்து வீழ்ந்தான். மூக்கு உடைந்து இரத்தம் ஒழுகியது. மகாலிங்கம் மெதுவாக எழுந்து நின்றான்.

தங்கராசாவின் வெறி அடங்கவில்லை. கோபத்தோடு மகாலிங்கத்தை நோக்கிச் சென்றான்.

எல்லாம் கணப்பொழுதில் நிகழ்ந்தன.

தங்கராசாவிற்குக் குறுக்கே ஒருவன் பாய்ந்தான். பாய்ந்தவன் அவன்மார்பில் கைவைத்து ஓங்கிப் பின்னால் தள்ளிவிட்டான். தங்கராசாவும் விதானையாரும் ஒருங்கே நிலத்தில் சர்ய்ந்தனர்.

'ஆராவது தம்பியிலை இனித் தொட்டால் குடலை எடுத்து மாலையாய்ப் போடுவன்...'

வாமதேவன் பொங்கும் சினத்தோடு நின்றிருந்தான்;

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோதிமயமாக இருக்க



ஏன் உன் கணவர் கோபித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிருர்?

'ஜெகஜோதி' பற்பொடி வேணுமாம். கடைக்குப் போய் அதை வாங்கி வந்து பல் தேய்த்த பிறகுதான் காப்பியே சாப்பிடுவாராம்.



ஆசிய ஜோதி யார்?

பண்டித ஜவஹர்லால் நேரு வெறிகுட்! ஜெகத்துக்கே ஜோதி?

பற்களை தூய்மையாக வைத்து வெண்ணிறப்படுத்தி உறுதிப்படுத்தும் ஜெகஜோதி பற்பொடியே!

சபாஷ்! நூறு மார்க்குகள்.



''குருதேவா தங்கள் ஆன்ம ஜோதியை ஜொலிக்கச் செய்ய குருதெனிய ஜெகஜோதியைக் கொண்டுவந்திருக்கிறேன் பிரபோ!''


கொண்டுவா இங்கே!

இன்றுதான் என் தவத்தின் பயனை அடைந்தேன்.




ஆகா! என்னே உன் அழகு தக்காளிப்பழ மேனி, மூன்ரும் பிறை நெற்றி, மயக்கும் விழி! முத்துப்போன்ற பல் வரிசை.

அப்படியல்ல என் கண்ணுளா ஜெகஜோதி பற்கள் என்று சொல்லுங்கள்.



என்ன உங்கள் வயது 102 என்கிறீர்கள் அதெப்படி? ஒரு பல் கூட விளாமல் உறுதியாக இருக்கின்றது. சொல்லும் சுத்தமாக இருக்கின்றது.

'ஓ'...அதுவா நான் உபயோகிப்பது ஜெகஜோதி பற்பொடியை. அதுதான்பல்லையும் காக்கும் உயிர்த் தோழன்.



முதலாளிகிட்ட போய் பல்லைக் காட்டினல் சம்பளம் கூட கொடுப்பார்னியே திட்டு தான் கிடைச்சது போ!

ஐய்ய! உன் காவி படிந்த கரை படிந்த பல்லையா காட்டுவது? ஜெகஜோதி பற்பொடியைப்போட்டு நல்லா தேய்ச்சு விட்டு பிறகு போய் பார்.

## ஜெகஜோதி அன் கொம்பனி


**குருதெனியா, கண்டி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குவளையின் எழிலும்**
**வேலின் கொடுமையும்**

## இறுதிக்கடிதம்



**'சிரித்திரன்'** ஏப்பிரல் இதழில் குமார் வரைந்த கடிதத்திற்கு 'ரேகா'க்கள் பதில் எழுதியிருந்தார்கள். கொட்டாஞ்சேனை மலர்விழி, பருத்தித்துறை த. இலங்காதேவி. ஆகியோர் எழுதியிருந்த கடிதங்கள் பரிசுக்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டன. ஆனால்... ஆனால்... இக்கடிதக்கதையை ஆரம்பித்துவைத்த 'கமலன்' பதிவுத்தபாலில் ஒரு கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார். ரேகாவிற்குத் திருமணம் முடிந்துவிட்டதாம்!... இதோ, குமாரின் இறுதிக்கடிதம்... இது உண்மைக்கதைதானோ?...

—ஆசிரியர்,

# எங்கிருந்தாலும் வாழ்க!

**'கமலன்'**

என் ரேகா;

உன் கடிதம் வருமென எதிர்பார்த்திருந்து நாட்கள் கடந்து விட்டன. இனி உன்னிடமிருந்து கடிதம் வாரதென்பதை நான் நன்கு அறிவேன். பிறன் ஒருவனுக்கு உரிமையான ஒரு பொருளை அடைய விரும்புவது அறிவீனம். சட்டப்படி உனக்குத் திருமணமான செய்தியை அறிந்தும், இன்னும் நான் உயிரோடு இருக்கிறேனே? ரேகா என்னை ஏன் இந்த அவல நிலைக்குள்ளாக்கினாய்? நான் தான் உன்னை அசாதாரண பெண்ணாக நினைத்து விட்டேன். அது என் தவறு. ஏற்கனவே உனக்கு நிச்சயிக்கப்பட்டவனுடன் வாழ்வதால் கிடைக்கப் போகும் சுகபோக வாழ்வு என்னுடன் வாழ்வதால் கிடைக்காது என்பதை நீ நன்கறிவாய். நாம் இருவரும் இணைந்து வாழப் பணம் தான் முக்கியமென்பதை முன்பே எழுதி விட்டாயே? என்னுடன் வாழ நீ விரும்பியிருந்தால் அன்று நான் என்னுடன் வரும்படி கேட்ட போதே என்னுடன் வந்திருப்பாய். அதற்கும் போலிக் காரணம் கூறுவாயடி என்னுடன் கொண்ட காதலுக்கா என்னோடு வந்தால் 'ஓடிப் போனவள்' என்று உன்னை உற்றாரும் ஊராரும் தூற்றுவார்கள். உன் அன்புத் தந்தை, தாய், சகோதரர்களை விட்டு எப்படிப் பிரிந்து வரமுடியும்? நான் பெண் எங்கள் இனத்திற்கேயுரிய கட்டுப்பாடு என்னைத் தடுத்தது என்றெல்லாம் கதையளப்பாய். காதலனுடன் வாழவேண்டும் மென்பதற்காக வீட்டைவிட்டு வெளியேறிய பெண்கள் எத்தனையோ ஆயிரம் பெண்கள் இருக்கிறார்களே? அவர்களையெல்லாம் சமூகம் ஒதுக்கி விட்டதா? அவர்களைவிட நீ எந்த விதத்தில் உயர்ந்தவள்? உண்மையில் அவர்களிலும் மட்டமான ரகத்தைச் சேர்ந்தவள் நீ. உள்ளத்தால் என்னுடனும் உடலால் இன்னொருவனுடனும் வாழப் போகிறாய். இது எந்த வகைக் கற்பு? உள்ளத்தால் ஒருவனை நினைப்பதும் ஒழுக்கக்கேடு என்பதைப் படித்த நீயே கற்பிற்குப் புது இலக்கணம் வகுத்து விட்டாய்.

ஏனடி ரேகா, என்னை உன் தந்தையிடம் பெண் கேட்க வரும்படி எழுதினாய்? ஏன் இந்த நாடகம் நடத்தினாய்? உன் தந்தையிடமும் நான் அவமானப் பட வேண்டுமென்பதற்கா, அல்லது கடைசிவரை என்னுடைன் நீ வாழ விரும்பினாய் என்று நான் நம்புவதற்கா?

இக் கடிதம் உனக்குக் கிடைக்கும்போது உனக்கு திருமண நாள் நிச்சயிக்கப் பட்டிருக்கும். ஏன் உன் மணநாள் அழைப்பிதழே இக் கடிதத்திற்குப் பதிலாகக் கிடைக்கலாம். அதையும் வரவேற்கிறேன். உன் குமார் மற்றும் ஆண்களைப்போல் வஞ்சம் தீர்ப்பவனல்ல. ஒருவர் செய்த பழி இன்னொருவரைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்ந்ததுபோல், பல்கலைக்கழகச் சூழல் உன்னை மயக்கி என் வாழ்வைச் சூறையாடி விட்டது. இது தான் என் தலைவிதி போலும்.

ரேகா, உள்ளத்தால் என்னுடன் உடலால் இன்னொருவருடன்வாழப்போவதாக எழுதினுயே? அந்த வாழ்க்கையை வாழ்ந்து இன்னொருவனது வாழ்வையும் பாழாக்காதே? நீ சந்தோஷமாக உன் கணவருடன் வாழ். என்றும் உன் வாழ்வு சிறக்க வாழ்த்துகிறேன்.

ஆனல் ரேகா இந்தக் குமார் இன்னொருத்தியுடன் வாழமாட்டான். மற்றும் ஆண்களைப் போல் இவன் கோழையல்ல. உன்னுடன் வாழ முடியாத நான் இனி எந்தப் பெண்ணுனும் மாற மாட்டேன். உன்னுடன் வாழ முட்டுக் கட்டையாக இருந்தது பதவியும் பணமும் தானே! அது இரண்டையும் அடைவது தான் என் குறிக்கோள். ஆண்களால் ஏமாற்றப்பட்ட பெண்கள் மட்டும் தான் வாழ்வில் விரக்தியடைந்திருக்கலாம். ஆனல் பெண்களால் ஏமாற்றப்பட்ட ஆண்களும் உலகில் இருக்கிருர்களென்பது உண்மை.

ரேகா, உன் நினைவை உறையிலிருந்து வாளை எடுத்து விடுவதுபோல் என் இதயத்திலிருந்து எடுத்தெறிந்து விட என்னல் முடியாது. என் உடல் சிதையிலே வேகும்போதும் உன் நினைவுடனேயே வேகும். என்னேடு பழகிய பழைய ரேகாவின் நினைவுடனேயே நான் வாழ்ந்து விடுவேன். உன் புதிய வாழ்வு ஒளிபெற என்றும் பிரார்த்திப்பேன்.

—ஏமாற்றப்பட்ட குமார்—

---



ஒருவர்: என் மகளுக்கு உன் மகனைக் கலியாணம் பண்ணி வைக்கலாமென்று யோசிக்கிறேன் எப்படி... கெட்டிக்காரனு மகன்?

மற்றவர்: ஷ... பெரிய கெட்டிக்காரன். கைவிட்டிட்டு சைக்கிள் ஓடுவான்... வாயால் சிகரட் புகைவளையம் ஊதுவான்... கள்ளுக்குடித்திட்டு ஆடாமல் நடப்பான்...

ஒருவர்: !!!!!

—ஜோக்கிரடீஸ்

---

கடவுளைப்பற்றி ஆஸ்திகனை விடநாஸ்திகனுக்குத்தான் கூடத் தெரியும்; ஏனெனில், ஆஸ்திகன் கடவுளைப்பற்றிக் கூறுவதெல்லாம் சுத்தப்பொய் என்று மறுத்துக் கூறுகிறுனே நாஸ்திகன்!

---




புடவைத் தினுசுகளுக்கு

‘சிங்காரம்ஸ்’



தங்க நகைகளுக்கு

டைமா நகை மாளிகை

47, செட்டியார் தெரு, கொழும்பு-11. தொலைபேசி: 20875





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான நிரந்தரமான புகைப்படங்களுக்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்

★

# ஞானம்ஸ் ஸ்ருடியோ

23, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

கிளைஸ்தாபனம்:
17, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

போன்: 7067

---

**வெண் நிற ஆடை**

பாலிலும் வெண்மை தரும்

★ மில்க் வைற் நீல சோப்

★ மில்க் வைற் பார் சோப்

★ மில்க் வைற் சலவைப் பவுடர்

வாங்கிப் பாவித்து உறைகளை அனுப்பி

# பரிசுகளைப் பெறுங்கள்

தொலைபேசி: 7233 தந்தி: 'மில்க்வைற்'

**மில்க்வைற் சோப் தொழிற்சாலை**

காங்கேசன்துறை வீதி, — யாழ்ப்பாணம்.

கிளை: மில்க்வைற் டிப்போ, — 83, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு—13




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதன சஞ்சீவிலேகியம்

(ஆண்களுக்கு மட்டும்)

## வாலிப வயோதிப அன்பர்களே!

உங்கள் உடல் நலனைச் சிறிது சிந்தித்து சிறுவயதிலும் வாலிபவயதிலும் தெரிந்தும் தெரியாமலும் தவறான நட்பாலும் செய்கிற தவறுதல்களே இப்போது உங்களின் தசை, நாடி நரம்பு முதலிய சப்த தாதுக்கள் கெட்டு நஷ்டமடைந்து ரத்தக்குறைவு, சோர்வு, கண்எரிவு, தளர்ச்சி, கெட்டகனவுகள் அடிக்கடி சிறுநீர் உறுப்புக்கள் தளர்ச்சி, எடைகுறைவு, முதுகு, கை, கால், மூட்டுக்களில் வலி, பலஹீனம், பீதி, பயம், வெறுப்பு உண்டாகி தாய் தந்தையரிடமும் சொல்ல முடியாமல் மனவேதனையும் கஷ்டமும் அடைந்து நிம்மதி இல்லாமல் வாழ்கின்றீர்கள். ஷை காரணங்களால் உடல் நலம் பாதிக்கப்பட்டவர்களும் பலரிடம் வருடக் கணக்கிலும் சிகிச்சை பெற்றும் ஒரு பலனும் இல்லாமல் ஏமாந்தவர்களும் இனி கவலைப்படவேண்டாம்.

வியாதியஸ்தர்கள் எமது மதன சஞ்சீவி லேகியத்தை ஒரு புட்டி உபயோகிக்கும் பொழுதே பலனைக்காணலாம். எடை அதிகப்பட்டு இரத்த விருத்திபுடன் நாடி நரம்புகள் பலமடைந்து புதிய சக்தி, புத்துணர்ச்சி பெற்று வாழலாம். எடை கூடியவர்களும் நீரிழிவு (ப்ளட்பிரசர் - Blood Pressure) பித்தக்கொதிப்பு உள்ளவர்களும் சாப்பிடலாம். ருசியானது. நம்பிக்கையானது. பத்தியமில்லை. ஒரே புட்டியில் குணம் காணலாம். இழந்த சக்தியை மீட்டு வீரியத்தையும் திரேக வளர்ச்சியையும் குடும்ப வாழ்க்கைக்கும் சிறந்தலேகியம்.

எமது முருகானந்த வைத்தியசாலையின் இணையற்ற தயாரிப்பான மதன சஞ்சீவி லேகியம் சக்திவாய்ந்த மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.

1 ருத்தல் ரூபா 23-00 ½ ருத்தல் ரூபா 12-00

வி. பி. பி. யில் அனுப்பப்படும் மருந்துக்கு அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.


# முருகானந்த வைத்தியசாலை

104, செட்டியார் தெரு, கொழும்பு—11.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பின் சிரிப்பு



சிறுவன்: ரயில்கள் பாடுமா அப்பா?

தந்தையார்: போடா மண்டு. ரயில்கள் எப்படியடா பாடும்?

சிறுவன்: அப்படியானுல் கோட்டை ஸ்டேஷனில் 'அந்தப் புகையிரதம் எல்லாப் புகையிரத ஸ்தானங்களிலும் நிற்பாட்டப் பாடும்' என்று ஏன் சொல்லுகிருர்களப்பா?



சிறுமி: அம்மா! அப்பாவின் பெயரும்பத்திரிகையில் வரப் போகிறது.

தாயார்: ஏன் மகளே 'அப்படி' சொல்லுகிருய்?

சிறுமி: 1971-ல் குடிசன மதிப்பு எடுக்கப் போவதாகப் பத்திரிகையில் போட்டிருக்கு. அப்பாவும் நித்தியம் குடிக்கிறவர்தானே!

—ஐயக்குரு

---

பெண் கடத்து வழக்கொன்றில் எதிரிக்கு இரண்டு வருடகடு மீயச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. எதிரி சொன்னுன்! நான் தப்பினேன் பிழைத்தேன்! இவளைத் தொட்டதற்கு இரண்டு வருடச் சிறை கிடைத்தது. திருமணம் செய்திருந்தால் சிலவேளை தூக்குத் தண்டனையே கிடைத்திருக்கலாம்!'

—கரஸ்

ஒருவர்: (காய்கறிக்காரியிடம்) நாளைக்காலை என் மகளுக்குக் கலியாணம் பத்துமணிக்குத் தாலி கட்டுகிற நேரம். அந்த நேரம் வந்து 'கத்தரி கத்தரி' என்று கூச்சல் போடாதே.

ச. ரா. பா. சர்மா

---




கணவன்: (கோபமாக) நேற்று வாங்கிய புதுப்புடவையைக் கட்டாமல் வேறுபுடவையை ஏன் கட்டிக்கொண்டு புறப்படுகிருய்?

மனைவி: அது நாலுநாள் கழித்துக் கட்டுகிறேன்.

கணவன்: ஏன்?

மனைவி: எதிர்வீட்டு எலன் குமாரிக்குக் கண்நோய் தொடங்கியிருக்கிறது.

ஜும் 'அன்ட' விஜி









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் துள்ளி எழுந்தீர் ஐயா!"



இந்த இரத்த பாசத்தினரை
இன்றே ஒழித்துக்கட்டுங்கள்!

"றன்பக்"

மூட்டைப்பூச்சி மற்றும் கொசு போன்ற
விஷக்கிருமிகளை பூண்டோடு அழிக்கவல்லது.

தயாரிப்பாளர்கள்:

அப்துல்லா இன்டஸ்றீஸ்

அன்ட் பேப்பர் பேக்ஸ் உற்பத்தியாளர்கள்

72, பாபர் வீதி —— கொழும்பு-13.

★ சாயி மெடிக்கல்ஹோல் ★

எல்லாவியாதிகட்கும் குறைந்த கட்டணத்தில்
சிகிச்சை அளிக்கப்படும்.

நேரில் வர வசதியில்லாதவர்கள் வியாதியின் முழுவிபரம்
எழுதி விபரம் அறியலாம்.

விபரங்கட்கு:

திருமதி வசந்தா அப்பாத்துரை

அவ்ரா கட்டடம்

19/N, செட்டியார் தெரு, கொழும்பு—11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது. பதிவு இலக்கம்: கியூபி-58/800





முயல் மார்க் நூல் தரமானது உரமானது.

வானவில் வர்ணங்களில் வகைவகையான "முயல் மார்க்" தையல் நூல்களை எங்கும் பெற்றுக்கொள்ளலாம்.

தயாரிப்பாளர்கள்:

சம்பியன் திரெட் மனுபக்சரிங் கம்பெனி,

கொழும்பு-12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

67, பிறவுன் வீதியில் வசிக்கும் சி. சிவஞானசுந்தரம், அவர்களால் 234, கே. கே. எஸ். வீதியிலுள்ள ஸ்ரீ லங்கா அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.